Follow us:

# தமிழன்

THAMILAN தமිලන්

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 02, இதழ் : 322 பிலவ வருடம், ஆவணி மாதம் 23ஆம் திகதி புதன்கிழமை (08.09.2021) ஹிஜ்ரி - 1443, முஹர்ரம் பிறை - 29, 0115886187 - பக்கங்கள் 09

'தமிழன்' மின்னிதழ் பதிப்பு e-Paper

## தாயும் 4 சிசுக்களும் உயிரிழந்த சோகம்

### அம்பாறையில் சம்பவம்

கொரோனா தொற்றுடன் அனுமதிக்கப்பட்டிருந்த தாயொருவர் பிரசவித்த நான்கு குழந்தைகள் உயிரிழந்த நிலையில் பிறந்துள்ளதுடன், தாயாரும் பலியான துயரமான சம்பவம் அம்பாறை பொது வைத்தியசாலையில் இடம்பெற்றுள்ளது.

குறித்த தாய் கடந்த 4ஆம் திகதி இந்த குழந்தைகளை பிரசவித் துள்ளதாகவும் அந்த நான்கு குழந்தைகளும் பிறக்கும்போதே இறந்து பிறந்ததாகவும் வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, இந்த கர்ப்பிணி தாய் அம்பாறை, விஜிதபுர பிரதேசத்தைச் சேர்ந்தவர் என்பதுடன்,... 02≫

## நக்கல் நமசிவாயம்

பதவி எடுத்த கையோட பெட்ரோல் விலைய குறைப்பாரெண்டு எதிர்பார்த்த பெசில் ஐயாவே நாட்டுப் பொருளாதாரம் சரியில்லையெண்டு சொல்லிப்போட்டார்... இனி நமக்கு எதையும் தாங்கும் இதயம் வேணும் பாருங்கோ





# பாதுகாப்பு ஒத்துழைப்புக்காக 50 மில்லியன் டொலர் கடன்

- பாரதத்திடம் கோருகிறது இலங்கை
- தூதுவர் மிலிந்தவூடாக நடவடிக்கை

•நமது விசேட செய்தியாளர்

இலங்கையில் சீனாவின் ஆதிக்கம் அதிகரித்துள்ள நிலையில், இந்தியாவுடனான தொடர்பை வலுப்படுத்துவதற்கு அரசாங்கம் தீவிர முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக அறியமுடிந்தது. அதற்கென புதிய வியூகம் ஒன்றை இலங்கை அரசாங்கம் வகுத்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

அதற்கமைய பாதுகாப்பு, உயர்நிலை இராணுவ பயிற்சிகள் மற்றும் பயங்கரவாதத்துக்கு எதிரான இந்தியாவின் 50 மில்லியன் டொலர் கடனைப் பயன்படுத்துதல் ஆகியவற்றை முன்னிறுத்தி ஆவணமொன்று தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவுக்கான இலங்கையின் உயர்ஸ்தானிகராக நியமிக்கப்பட்டுள்ள மிலிந்த மொறகொட இதற்கான ஆயத்தப்பணிகளைச் செய்து வருவதாக நம்பகமாக அறியமுடிந்தது.

2020 ஆம் ஆண்டு முதல் இந்தியாவுக்கான உயர்ஸ்தானிகர் பதவியில் வெற்றிடம் காணப்பட்டது. இந்நிலையில், இலங்கையின் கிழக்குத்துறைமுக அபிவிருத்தியை இந்தியாவுக்கு வழங்காமையினால் இருதரப்பினரிடையே முறுகல்நிலை தோன்றியது.

அத்துடன் சீனாவின் ஆதிக்கம் இலங்கையில் தொடர்ச்சியாக மேலோங்கியது.

இந்நிலையில், இந்தியாவுடனான தொடர்பை வலுப்படுத்துவதன் அவசியம் வலியுறுத்தப்பட்டுள்ளது. 02≫

## அத்தியாவசிய சேவைகள் ஆணையாளரால் அதிகாரிகளுக்கு உத்தரவு பிறப்பிக்க முடியும்

### மாவட்ட, பிரதேச செயலர்களுக்கும் பணிப்புரை வழங்கலாமென அறிவிப்பு

பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளை சட்டத்தின் 5ஆவது பிரிவின் பிரகாரம், மாவட்டச் செயலாளர்கள் மற்றும் பிரதேச செயலாளர்கள் உட்பட சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குப் பணிப்புரை வழங்கும் முழுமையான அதிகாரம், அத்தியாவசியச் சேவைகள் ஆணையாளர் நாயகத்துக்கு உள்ளதென, ஜனாதிபதியின் செயலாளர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது குறித்து ஜனாதிபதி ஊடகப் பிரிவு நேற்று (07) வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நெல், அரிசி, சீனி உள்ளிட்ட அத்தியாவசிய உணவுப் பொருட்களை... 02≫

## பாரிய நிதி நெருக்கடியில் நாடு

### பெசில் சபையில் பகிரங்க அறிவிப்பு



- ரூ. 1,600 பில்லியன் அரச வருமானம் இழப்பு
- உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கிகளிடம் கடன்பெறத் தீர்மானம்

•சபை செய்தியாளர்கள்

நாடு பாரதூரமான நிதி நெருக்கடியில் உள்ளது. அரச வருமானத்தைவிட செலவீனங்கள் அதிகமாகவுள்ளன. தேவையற்ற அனைத்து செலவீனங்களும் துண்டிக்கப்பட்டுள்ளதுடன், பொது மக்களுக்கு பயன் தரக்கூடிய வேலைத்திட்டங்களுக்கு ... 02≫



## அடுத்தவாரம் இத்தாலி செல்லும் பிரதமர் மஹிந்த

### வத்திக்கானில் பாப்பரசரை சந்திக்கவும் ஏற்பாடு

•நா.தினுஷா

பிரதமர் மஹிந்த ராஜபக்‌ஷ அடுத்தவாரம் இத்தாலிக்கான விஜயத்தினை மேற்கொள்ளவுள்ளார்.

இத்தாலி பொலொக்னா பல்கலைக்கழகத்தில் இடம்பெறும் மாநாடொன்றில் கலந்துகொள்ள செல்லும் பிரதமருடன், வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸும் செல்லவுள்ளார். 02≫

## 10 நாட்களில் 1,949 மரணங்கள்

•யோ.தர்மராஜ்

நாட்டில் கொரோனா தொற்றுத் தீவிரத்தால் நாளுக்கு நாள் மரணங்களின் எண்ணிக்கையில் சடுதியான அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதையடுத்து உயிரிழப்புகள் 10 ஆயிரத்தை தாண்டியுள்ள அதேவேளை, இறுதி 10 நாட்களில் நாட்டில் ஆயிரத்து 949 மரணங்கள் பதிவாகியுள்ளன.

டெல்ட்டா திரிபினால் நாட்டில் மீண்டும் கொரோனா நோயாளர்கள் அதிகரித்திருப்பதுடன், மரணங்களும் 200 ஐ தாண்டியுள்ளது. அதன்படி, 4 ஆம் திகதி பதிவான 189 மரணங்களுடன் மொத்த கொரோனா மரணங்களின் எண்ணிக்கை 10 ஆயிரத்து 320 ஆக பதிவாகியது. 02≫

## அதிபர், ஆசிரியர்களுக்கு இம்மாத சம்பளத்துடன் இடைக்கால கொடுப்பனவாக ரூ. 5 ஆயிரம் இணைப்பு

### அரசாங்கம் அறிவிப்பு; தீர்வை ஏற்றுக்கொள்ளுமாறும் கோரிக்கை

•யோ.தர்மராஜ்

அதிபர், ஆசிரியர்களின் சம்பள முரண்பாட்டை வரவு – செலவுத்திட்டத்தில் இணைக்கும் வரை அவர்களுக்கு இடைக்கால கொடுப்பனவாக வழங்க முன்வைக்கப்பட்ட 5 ஆயிரம் ரூபா இம் மாத சம்பளத்துடன் கிடைக்கும் என அமைச்சரவை இணைப் பேச்சாளரும் அமைச்சருமான ரமேஷ் பத்திரண தெரிவித்தார்.

அத்தோடு, அரசினால் வழங்கப்பட்டுள்ள தீர்வை ஏற்றுக்கொண்டு ஆசிரியர்கள் கற்பித்தல் செயற்பாடுகளில் ஈடுபடுவார்கள் என்ற நம்பிக்கையுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று (07) இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டபோது, ஆசிரியர் மற்றும் அதிபர்களின் சம்பள முரண்பாடு குறித்து ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.



இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், 02≫

## அவசரகாலச் சட்டத்தை தொடர்ந்தும் அமுல்படுத்தும் எதிர்பார்ப்பு கிடையாது

### சொல்கிறார் அமைச்சர் ரமேஷ்

•யோ.தர்மராஜ்

நாட்டில் அத்தியாவசியப் பொருட்களை பதுக்கிவைத்தலை கட்டுப்படுத்துவதற்காகவே அவசரகாலச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளதாகவும் அதனை நீண்ட காலத்திற்கு நடைமுறைப்படுத்துவதற்கு எவ்வித எதிர்பார்ப்பும் அரசுக்கு இல்லை என்றும் அமைச்சரவை இணைப் பேச்சாளரும் அமைச்சருமான ரமேஷ் பத்திரண தெரிவித்தார். அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று (7) இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்ட போது, அவசரகாலச் சட்டம் அமுல்படுத்தப் பட்டுள்ளது குறித்து ஊடகவியலாளரினால் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். 02≫

## தொட்டிலில் விளையாடிய சிறுமி



### பரிதாப உயிரிழப்பு

#### தெரணியகலையில் துயரம்

•அருண் யுகேஷ்

கேகாலை மாவட்டம் தெரணியகல பிரதேச செயலகத்திற்குட்பட்ட மாளிபொட தோட்டம் நிந்தகம பிரிவில் தொட்டிலில் சிக்கி 11வயதான சிறுமி உயிரிழந்துள்ளார். இச்சம்பவம் நேற்றுமுன்தினம் மாலை 4 மணியளவில்... 02≫

## கொரோனா மரணங்களில் எதிர்பார்த்த வீழ்ச்சியில்லை

### சுகாதார அமைச்சு தெரிவிப்பு

•யோ.தர்மராஜ்

நாட்டில் பதிவாகும் மரணங்களின் எண்ணிக்கையில் நாங்கள் திருப்தியடையக் கூடியளவிற்கு வீழ்ச்சி ஏற்படவில்லை என சுகாதார சேவைகள் பிரதி பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார். அத்தோடு, சுகாதார அமைச்சினால் நாளொன்றுக்கு 35 ஆயிரத்துக்கு மேற்பட்ட அன்ரிஜன் பரிசோதனை தொகுதிகள் பகிர்ந்தளிக்கப்பட்டாலும் நாளொன்றுக்கு 3 ஆயிரத்தை... 02≫

## ஐந்து பிரதான நகரங்களில் தொழில்நுட்ப பூங்காக்கள்

### அமைச்சரவை தீர்மானங்கள் 09≫

## 20 வயதுக்கு மேற்பட்டோருக்கு ஆறு வாரங்களுக்குள் தடுப்பூசி

### இராஜாங்க அமைச்சர் சன்ன உறுதி



•சபை செய்தியாளர்கள்

எதிர்வரும் ஆறு வாரங்களுக்குள் 20 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் தடுப்பூசி வழங்கும் பணி நிறைவுற்றிருக்குமென இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று (07) வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தில் ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் சாந்த பண்டாரவால் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கருத்து வெளியிடுகையில்,

நாட்டில் பல கிராமசேவகர் பிரிவுகளுக்கு தடுப்பூசிகள் கிடைக்கப்பெற்றதில் தாமதம் ஏற்பட்டுள்ளமையை ஏற்றுக்கொள்கிறோம். 02≫

# தடுப்பூசி வழங்குவதில் அரசியல்; அனுர எம்.பி. பரபரப்பு குற்றச்சாட்டு

## கெஹேலிய, பந்துலவுக்கு கொடுக்கப்பட்டதாகவும் சபையில் தகவல் வெளியிட்டார்

சபை செய்தியாளர்கள்

கொவிட் தொற்று நிலைமை பாரிய அழிவுக்கு சென்றமைக்கு அரசியலே காரணமாகும். தடுப்பூசி வழங்குவதிலும் அரசியல் இருந்தது. சில அமைச்சர்களுக்கு கோட்டா முறையில் தடுப்பூசி வழங்கப்பட்டதாக மக்கள் விடுதலை முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அனுரகுமார திஸாநாயக்க குற்றம் சுமத்தினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று (07) நடைபெற்ற 61ஆம் இலக்க அத்தியாவசிய பொதுச்சேவை சட்டத்தின் கீழான கட்டளை, இலங்கைப் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு சட்டமூலம், உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழான கட்டளைகள், ஏற்றுமதி மற்றும் இறக்குமதி (கட்டுப்பாடு) சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகள் மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

இதற்கு முன்னர் இந்த நாடாளுமன்றத்தில் உரையாற்றிய அரசாங்கத்தில் உள்ளவர்கள், எங்களிடம் வேண்டிய அளவுக்கு பணம் உள்ளது, நாட்டை சிறப்பாக கொண்டு செல்ல முடியும் என்றே கூறினர். ஆனால் நாட்டின் அரச வருமானத்தில் பிரச்சினை இருப்பதாகவும், வர்த்தக துறையில் ஏற்பட்டுள்ள பிரச்சினை மற்றும் டொலர் பற்றாக்குறை தொடர்பாக இந்த நாடாளுமன்றத்தில் இப்போது நிதியமைச்சர் கூறியுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக கூறும்போது, இந்த பொருளாதார நெருக்கடிக்கு அரசியலே காரணம். வேலைத்திட்டம் ஒன்றுக்காக செலவிடப்பட்ட தொகையிலும் பார்க்க குறைந்தளவான நிதியே அதற்காக பயன்படுத்தப்பட்டுள்ளது. மிகுதி பணம் அரசியல்வாதிகளின் பைகளுக்கே சென்றுள்ளது. இந்த அரசியலில் மாற்றம் ஏற்படவில்லை.

அத்துடன் கொவிட் தொற்று நிலைமையும் பாரிய அழிவுக்கு சென்றமைக்கும் அரசியலே காரணமாகும்.

தடுப்பூசி வழங்குவதிலும் அரசியல் இருந்தது. சில அமைச்சர்களுக்கு கோட்டா முறையில் தடுப்பூசி வழங்கப்பட்டது. கெஹேலிய ரம்புக்வெல்லவுக்கு மூவாயிரம் ஊசிகள் வழங்கப்பட்டன. அவை ஜயவர்தனபுர வைத்தியசாலையிலேயே வைக்கப்பட்டிருந்தன. அதில் நூறு பந்துல குணவர்தனவுக்கு வழங்கப்பட்டன என்றார்.

# சுகாதாரப் பிரிவினரின் சாதகமான சமிக்ஞை கிடைத்தால் பாடசாலைகள் திறக்கப்படும்

## கல்வி அமைச்சின் செயலாளர் தெரிவிப்பு

யோ.தர்மராஜ்

சுகாதாரதுறையினரிடமிருந்து சாதகமாக சமிக்ஞை கிடைத்தவுடன் நாட்டிலுள்ள அனைத்து பாடசாலைகளையும் திறப்பதற்கு தயாராக இருப்பதாக கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா தெரிவித்துள்ளார்.

பாடசாலைகளை ஆரம்பிப்பது குறித்து மாகாண கல்வி பணிப்பாளர்களுடன் தொடர்ந்து பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட்டுவருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த கலந்துரையாடலுக்கு பின்னர் பாடசாலைகளை திறப்பது தொடர்பான திட்டங்கள் கல்வி அமைச்சரிடம் கையளிக்கப்படவுள்ளதுடன், கடந்த காலத்தில் கொரோனா தொற்று மத்தியில் பாடசாலைகள் திறக்கப்பட்டு முன்னெடுக்கப்பட்ட செயற்பாடுகள் மீண்டும் ஆராயப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஆசிரியர்களில் சுமார் 88 வீதமானவர்களுக்கு தடுப்பூசியின் முதல் ஊசி வழங்கப்பட்டுள்ளதுடன், அவர்களுக்கான இரண்டாவது ஊசி தற்போது வழங்கப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## அதிபர், ஆசிரியர்களுக்கு...

ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களின் சம்பள முரண்பாட்டை தீர்ப்பதற்கு அரசாங்கம் உரிய தீர்வை முன்வைத்துள்ளது. கொரோனா தொற்றுக்கு மத்தியில் பொருளாதார மற்றும் நிதி பிரச்சினைகளுக்கு மத்தியில் ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களின் சம்பள அதிகரிப்பு எவ்வாறு அதிகரிக்கும் என்பதை கடந்த வாரத்தில் தெளிவாக அறிவித்துள்ளோம்.

அதிபர் மற்றும் ஆசிரியர்களின் அடிப்படை சம்பளமானது நூற்றுக்கு 17 முதல் 26 வீதம் அதிகரிக்கவுள்ளது. இதனை ஒரே தடவையில் அதிகரிக்குமாறு சங்கங்கள் கோரிக்கை விடுத்துள்ளன. ஆனால், நாட்டில் காணப்படும் நிதி நெருக்கடியால் மூன்று தவணையாகவே சம்பளத்தை அதிகரிக்க முடியும் என கல்வி அமைச்சு தெளிவாக கூறியுள்ளது. அதற்கு தேவையான நடவடிக்கைகளையும் அரசாங்கம் முன்னெடுத்துவருகின்றன.

அதேபோன்று, சம்பள முரண்பாட்டுக்கு தீர்வானது வரவு - செலவுத்திட்டத்தில் இணைக்கும் வரையில் ஆசிரியர்களுக்கு இடைகொடுப்பனவாக 5 ஆயிரம் ரூபா வழங்குவதற்கு யோசனை முன்வைக்கப்பட்டது. அதன்படி, இம்மாத சம்பளத்தில் குறித்த 5 ஆயிரம் ரூபா இணைக்கப்படும். பொருளாதார சிக்கல் இருந்தாலும் மாணவர்களுக்காக கடமையாற்றும் ஆசிரியர்களுக்காக தேவையான சம்பளத்தை வழங்குவோம். ஆகவே, அரசின் தீர்வை ஏற்றுக்கொண்டு கற்பித்தலில் ஈடுபடுவார்கள் என்றும் நம்பிக்கையுள்ளது என்றார்.

## பாதுகாப்பு ஒத்துழைப்புக்காக...

இதன் காரணமாக புதிய உயர்ஸ்தானிகராக நியமிக்கப்பட்டுள்ள மிலிந்த மொறகொட இந்திய மத்திய அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்க தயாராகிவருகிறார்.

இந்து சமுத்திரத்தில் இருநாடுகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் நோக்கில் சில கொள்கைத் திட்டமிடல்கள் குறித்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுடன் அவர் கலந்தாலோசித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காக 2019 ஆம் ஆண்டு 50 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்குவதாக இந்தியா உறுதியளித்திருந்தது. அந்தத் தொகையை இன்னும் பயன்படுத்தாமை குறித்து இலங்கை தயாரிக்கும் புதிய ஆவணத்தில் குறிப்பிடப்படவுள்ளது.

## தாயும் 4 சிசுக்களும்...

இவர் கர்ப்பம் தரித்து ஐந்து மாதங்களாகும் போது கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளார். அதன் பின்னர் தொற்றை குணப்படுத்துவதற்காக நீண்ட நாட்கள் வைத்தியசாலையில் சிகிச்சைப் பெற்றதன் பின்னர் மீண்டும் வீட்டுக்கு திரும்பியிருந்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில், அவருக்கு மீண்டும் ஏற்பட்ட திடீர் சுகயீனம் காரணமாக அம்பாறை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் இந்த நான்கு குழந்தைகளை பெற்றெடுத்துள்ளார். இருந்தபோதிலும் குழந்தைகள் உயிரிழந்த நிலையிலேயே பிறந்ததாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

ஆண் குழந்தைகள் இரண்டையும் பெண் குழந்தைகள் இரண்டையும் இவர் பிரசவித்துள்ளதுடன், குழந்தைகள் கொரோனா தொற்றின் காரணமாக உயிரிழந்திருக்கலாம் என சந்தேகிப்பதாக வைத்தியர்கள் தெரிவித்தனர்.

தாய் மற்றும் குழந்தைகளின் சடலங்களை சுகாதார பிரிவினரின் கண்காணிப்பில் தகனம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## கொரோனா மரணங்களில்...

அண்மித்த முடிவுகளே கிடைக்கப்பெறுவதாகவும் அவர் தெரிவித்தார்.

கொரோனா தொற்றுக்குள்ளானோரின் நிலைமை குறித்து நேற்று (7) ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் தற்போது அடையாளம் காணப்படும் கொரோனா நோயாளர்களில் சிறிய வீழ்ச்சி காணப்படுகின்றன. எனினும், கொரோனா தொற்றுக்குள்ளானோரை அடையாளம் காண்பதற்கு அதிகளவாக அன்ரிஜன் பரிசோதனை முன்னெடுக்கப்பட்டாலும் அதன் முடிவுகள் வெளிவருவதற்கு காலதாமதம் ஏற்படுகின்றன.

குறிப்பாக, சுகாதார அமைச்சினால் நாளொன்றுக்கு 35 ஆயிரத்துக்கு மேற்பட்ட அன்ரிஜன் பரிசோதனை தொகுதிகள் பரிந்தளிக்கப் பட்டாலும் நாளொன்றுக்கு 3 ஆயிரத்தை அண்மித்த முடிவுகளே கிடைக்கப்பெறுகின்றன. இவ்வாறு பரிசோதனை முன்னெடுக்கப்பட்டு தொற்றுக்குள்ளானோரின் முடிவுகள் நாள்தோறும் கிடைக்கப்பெறுவதில்லை.

எனினும், நாள்தோறும் தொற்றுடன் அடையாளம் காணப்படுவோரின் எண்ணிக்கையில் சிறிய வீழ்ச்சி ஏற்பட்டாலும் அது தொடர்பான முடிவுகளுக்கு தற்போது வரமுடியாது.

இதேவேளை, நாட்டில் ஏற்படும் மரணங்களில் நாங்கள் திருப்தியடையும் அளவிற்கு குறைவடையவில்லை – என்றார்.

## 10 நாட்களில் 1,949...

முதல் ஆயிரம் மரணங்களுக்கு 13 மாதங்களும் ஆயிரம் தொடக்கம் 2 ஆயிரம் வரையான ஆயிரம் மரணங்களுக்கு 23 நாட்களும் 2 ஆயிரம் தொடக்கம் 3 ஆயிரம் வரையான ஆயிரம் மரணங்களுக்கு 19 நாட்களும் 3 ஆயிரம் தொடக்கம் 4 ஆயிரம் வரையான ஆயிரம் மரணங்களுக்கு 23 நாட்களும் 4 ஆயிரம் தொடக்கம் 5 ஆயிரம் வரையான ஆயிரம் மரணங்களுக்கு 13 நாட்களும் 5 ஆயிரம் தொடக்கம் 6 ஆயிரம் வரையான ஆயிரம் மரணங்களுக்கு 8 நாட்களும் 7 ஆயிரம் தொடக்கம் 8 ஆயிரம் மரணங்களுக்கு 5 நாட்களும் 8 ஆயிரம் தொடக்கம் 9 ஆயிரம் மரணங்களுக்கு 5 நாட்களும் இறுதி ஆயிரம் மரணங்களுக்கு 5 நாட்களே சென்றுள்ளன.

அதன்படி, 31 ஆம் திகதி 215 மரணங்களும் முதலாம் திகதி 204 மரணங்களும் 2 ஆம் திகதி 202 மரணங்களும் 3 ஆம் திகதி 145 மரணங்களும் 4 ஆம் திகதி 189 மரணங்களுமாக 5 நாட்களில் 964 மரணங்கள் பதிவாகியதுடன், ஏற்கனவே பதிவாகிய மரணங்களுடன் சேர்த்து 10 ஆயிரம் மரணங்களை தாண்டியுள்ளது.

## அடுத்தவாரம் இத்தாலி...

மேற்படி மாநாட்டின் பின்னர் வத்திக்கானுக்கு செல்லவுள்ள பிரதமர் மஹிந்த, அங்கு புனித பாப்பரசரை சந்தித்து ஆசி பெறவுள்ளார்.

அதேபோல் இலங்கையில் நடைபெற்ற உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல் சம்பவங்கள் தொடர்பான விசாரணைகளின் முன்னேற்றம் குறித்தும் பிரதமர் அங்கு பாப்பரசருக்கு விளக்கமளிக்கவுள்ளார்.

ஐரோப்பிய நாடாளுமன்றத்தின் முக்கிய பிரதிநிதிகளை பிரதமர் இந்த விஜயத்தின்போது சந்திப்பாரென தெரிவிக்கப்படுகிறது.

இந்த பயணத்தை முடித்துக்கொண்டு அமைச்சர் பீரிஸ், நேரடியாக அமெரிக்கா சென்று ஐ.நா பொதுச் சபை அமர்வில் கலந்துகொள்ளவுள்ளார்.

பிரதமர் மஹிந்த நாடு திரும்பிய பின்னர் ஜனாதிபதி கோட்டாபய அமெரிக்காவுக்கான பயணத்தை மேற்கொள்ளவுள்ளார்.

## தொட்டிலில்...

இடம்பெற்றுள்ளதாகவும் கெனோரீட்டா டில்மினி என்ற சிறுமியே இவ்வாறு உயிரிழந்துள்ளதாகவும் தெரணியகலை பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சிறுமி தனது இரண்டு சகோதரர்களுடன் ஒவ்வொரு நாளும் ஊஞ்சல் கட்டி விளையாடுவது வழக்கமாக கொண்டிருந்துள்ளார். நேற்று முன்தினம் மாலை வீட்டில் உள்ள ஓர் அறைக்குள் சென்று கதவினை மூடிக்கொண்டு தொட்டிலில் ஊஞ்சல் ஆடிக்கொண்டு இருந்துள்ளார்.

மற்றைய இரு சகோதரர்களும் அறையின் கதவு பூட்டியிருந்தது அறிந்து கதவினை தட்டியும் சிறுமி எந்தவித சத்தமும் இன்றி இருப்பதை அறிந்து தாயிடம் கூறியுள்ளனர்.

இதனையடுத்து தாய் கதவை தட்டியுள்ளார். கதவு திறக்காத நிலையில் வீட்டின் பின்புறமாக சென்று யன்னல் வழியாக எட்டிப் பார்த்துள்ளார். அந்தச் சந்தர்ப்பத்தில் குறித்த சிறுமி தொட்டில் சீலையில் சிக்குண்டு தொங்கிக் கொண்டிருந்ததை கண்ணுற்றுள்ளார்.

அதன்பின்னர் சிறுமியை மீட்ட பெற்றோர், தெரணியகலை பிரதேச வைத்தியசாலைக்கு கொண்டுசென்றபோதிலும் அவர் ஏற்கனவே உயிரிழந்துள்ளதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை தெரணியகலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## அவசரகாலச் சட்டத்தை...

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆட்சிக்கு வந்ததன் பின்னர் பல்வேறு போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. கொரோனா தொற்று ஆபத்தான நிலையில் இருந்தபோதிலும் கூட நாட்டில் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. குறிப்பாக, ஜனாதிபதி ஆட்சிக்கு வந்ததன் பின்னர் போராட்டங்கள் முன்னெடுப்பதற்கென தனியானதொரு இடம் ஒதுக்கப்பட்டதுடன், போராட்டக்காரர்கள் மீது தண்ணீர் தாரையோ அல்லது தடியடியோ நடத்தப்படவில்லை.

ஆகவே, மொழி உரிமை, போராட்டம் நடத்தும் உரிமை மற்றும் கருத்து தெரிவிக்கும் உரிமைகள் என்பன பாதுகாக்கப்படுவதுடன், நாட்டு மக்கள் விசம் அருந்தும் வகையில் சில சந்தை நடவடிக்கைகள் குறித்து மக்கள் மத்தியில் எதிர்ப்புகள் எழுந்துள்ளன. நுகர்வோர் சட்டத்தில் சில சில உறுப்புரைகள் கடுமையானதாக இல்லை. அதனை பலப்படுத்துவதற்கான சட்ட நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படுகின்றன. எனினும், அதற்கு சட்டமா அதிபரின் அனுமதி தேவை என்பதால் அதற்கு காலதாமதம் ஏற்படும் என்பதை கவனத்தில் கொண்டும் தற்போதைய சூழ்நிலையை கருத்தில்கொண்டும் அத்தியாவசிய பொருட்களுக்கான அவசரகால சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது. இதனை நீண்ட காலத்திற்கு அமுல்படுத்தி செல்வதற்கு அரசுக்கு எவ்வித எதிர்பார்ப்பும் இல்லை.

அதேபோன்று, சீனி மற்றும் அரிசி போன்றவற்றிற்கு ஏற்பட்டுள்ள நிலைமையை சாதாரண நிலைமைக்குக் கொண்டுவதற்காகவும் அத்தியாவசிய பொருட்களை பாதுகாப்பதற்குமே அவசரகால சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது – என்றார்.

## 20 வயதுக்கு...

சினோபார்ம் தடுப்பூசிகளை பெற்றுக்கொடுப்பதற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்டங்களுக்கு அதனைப் பெற்றுக்கொடுப்பதில் சில தாமதங்கள் ஏற்பட்டன. சீனாவில் கொவிட் நோயாளர்கள் அதிகரித்திருந்தமையால் தடுப்பூசிகளை பெற்றுக்கொள்வதில் ஏற்பட்ட தாமதம் காரணமாகவே இந்த மாவட்டங்களுக்கு தடுப்பூசிகளை வழங்குவதில் சிக்கல்கள் ஏற்பட்டிருந்தன.

என்றாலும் கடந்த சில நாட்களுக்கு முன்னர் 4 மில்லியன் சினோபார்ம் தடுப்பூசிகள் கிடைக்கப்பெற்றதால் தடுப்பூசி வழங்கும் பணிகள் மீண்டும் தாமதமின்றி முன்னெடுக்கப்படுகின்றன. எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமைக்குள் சினோபார்ம் தடுப்பூசிக்கு தட்டுப்பாடு ஏற்பட்ட கிராம சேவகர் பிரிவுகளுக்கு உரிய வகையில் தடுப்பூசிகள் கிடைக்கப்பெற்றுவிடும்.

அதேபோன்று மாவட்ட மட்டத்தில் தரவுகளைப் பெற்றுக்கொடுக்கும் பணிகள் மாவட்ட செயலாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தன. தரவுகளை பெற்றுக்கொடுப்பதில் காணப்பட்ட சில சிக்கல்கள் காரணமாகவும் தடுப்பூசி வழங்கும் பணியில் தாமதம் ஏற்பட்டிருந்தது. 2012ஆம் ஆண்டு சனத்தொகை கணக்கெடுப்பின் பிரகாரம்தான் தரவுகள் சேகரிக்கப்பட்டிருந்தன. ஆனால், தற்போது சனத்தொகையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதால் தரவுகள் தொடர்பில் பிரச்சினைகள் எழுந்திருந்தன. இக்குறைப்பாடுகள் தற்போது நீக்கப்பட்டுள்ளன.

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமைக்குள் தடுப்பூசிக்கு தட்டுப்பாடு ஏற்பட்ட அனைத்து கிராம சேவகர் பிரிவுகளிலும் 30 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு தடுப்பூசி வழங்கும் பணி நிறைவுற்றிருக்கும்.

அரசாங்கத்தின் முதல் இலக்கு 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு தடுப்பூசியை வழங்குவதாகவே இருந்தது. அதன் பின்னர் 30முதல் 60 வயதுக்கு உட்பட்டவர்களுக்கு தடுப்பூசியை வழங்குவது இலக்காக இருந்தது.

அந்தப்பணியும் இறுதிக்கட்டத்தை எட்டியுள்ள நிலையில் 20 முதல் 30 வயதுக்கு உட்பட்டவர்களுக்கு தடுப்பூசியை வழங்கும் பணியும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் ஆறுவாரங்களுக்குள் 20 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு தடுப்பூசி வழங்கும் பணியை இறுதி செய்வதே அரசாங்கத்தின் அடுத்த இலக்காகும். இளையோருக்கு வழங்கப்படும் தடுப்பூசிகளின் வகைகள் குறித்து அச்சம் கொள்ளத்தேவையில்லை.

இவர்களுக்கு எந்தவொரு தடுப்பூசியையும் வழங்க முடியுமென உலகளாவிய ஆராய்ச்சிகளில் கண்டறியப்பட்டுள்ளது.

வெளிநாடு செல்பவர்களுக்கு பைசர் தடுப்பூசியை வழங்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்றார்.

## அத்தியாவசிய சேவைகள்...

மொத்தமாக பதுக்கி வைத்தல், அதிக விலையை அறவிடல் மூலம், நுகர்வோருக்கு அசௌகரியத்தை ஏற்படுத்தக்கூடிய சந்தை முறைகேடுகளைத் தடுக்க, பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 2ஆவது பிரிவின் மூலம் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம், அக்கட்டளைச் சட்டத்தின் iiஆம் பிரிவின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்தி, 5ஆவது பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட அத்தியாவசிய உணவு விநியோகத்துடன் தொடர்புடைய அவசரகாலச் சட்ட விதிமுறைகள், வர்த்தமானி மூலம் வெளியிடப்பட்டுள்ளன.

அந்த வகையில், பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 5ஆவது பிரிவின் பிரகாரம், அத்தியாவசியச் சேவைகளைப் பேணுவது தொடர்பான அனைத்து நடவடிக்கைகளையும் நடைமுறைப்படுத்துவது மற்றும் ஒருங்கிணைப்பது, அத்தியாவசியச் சேவைகள் ஆணையாளர் நாயகத்தின் கடமையாகும்.

இந்த உத்தரவின் கீழ், தங்கள் கடமைகளைச் செய்யத் தேவையான பிரதி ஆணையாளர்கள் அல்லது உதவி ஆணையாளர்களை, அத்தியாவசியச் சேவைகள் ஆணையாளரினால் நியமிக்க முடியும்.

அத்தியாவசியச் சேவைகள் பேணப்படுவதை உறுதிசெய்வதற்காக, பிரிவு 5இன் உத்தரவின் கீழ் நியமிக்கப்பட்ட எந்தவொரு தகுதிவாய்ந்த அதிகாரிக்கும், அத்தியாவசியச் சேவைகள் ஆணையாளர் நாயகத்தினால் உத்தரவு பிறப்பிக்கலாம். இவ்வாறு வழங்கப்படும் அனைத்து உத்தரவுகளுக்கும் இணங்கிச் செயற்படுவது, உரிய அதிகாரியின், பதவி வகிப்பவரின் அல்லது ஒருங்கிணைப்பு அதிகாரியின் கடமையாகும்.

அந்த வகையில், பொதுமக்களின் இயல்பு வாழ்க்கையை இயல்பு நிலையில் பேணும் வகையில், நெல், அரிசி, சீனி உள்ளிட்ட ஏனைய நுகர்வுப் பொருட்களின் விநியோகத்தை ஒருங்கிணைப்புச் செய்வதற்காக, அத்தியாவசியச் சேவைகள் ஆணையாளர் நாயகத்துக்கு ஜனாதிபதி அதிகாரம் அளித்துள்ளார்.

அத்தியாவசியச் சேவைகள் ஆணையாளர் நாயகத்தினால் மாவட்டச் செயலாளர்களுக்குப் பணிப்புரை வழங்கமுடியாது என்று கூறி மக்களைப் பிழையாக வழிநடத்தும் வகையில், எதிர்க் கட்சியினரால் நேற்றுமுன்தினம் (06) நாடாளுமன்ற அமர்வின்போது கருத்து வெளியிட்டமை தவறாகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பாரிய நிதி நெருக்கடியில்....

மாத்திரமே நிதி ஒதுக்கீடுகளும் செலவீனங்களும் மேற்கொள்ளப்படுகின்றன. அதேபோன்று வீழ்ச்சி கண்டுள்ள அந்நிய செலாவணியை வருட இறுதிக்குள் ஸ்திரமாக்குவதுடன், கடன் இல்லாத நாட்டை கட்டியெழுப்புவதே அரசாங்கத்தின் நோக்கமாகவுள்ளதாக நிதி அமைச்சர் பெசில் ராஜபக்ஷ தெரிவித்தார். நாடாளுமன்றத்தில் நேற்று (07) நடைபெற்ற அத்தியாவசிய பொதுச் சேவை சட்டத்தின் கீழான கட்டளை, இலங்கைப் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு சட்டமூலம், உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழான கட்டளைகள், ஏற்றுமதி மற்றும் இறக்குமதி (கட்டுப்பாடு) சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகளை சமர்ப்பித்து உரையாற்றும் போதே இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கருத்து வெளியிடுகையில்,

முழு உலகமும் எதிர்கொண்டுள்ள கொவிட் பெருந்தொற்றால் இலங்கை மக்களும் பாதிக்கப்பட்டுள்ளதுடன், எமது பொருளாதாரம் அதனால் பாதிப்புக்குள்ளாகியுள்ளது. அந்நிய செலாவணி தொடர்பில் பாரிய நெருக்கடிக்கும் எமது நாடு முகங்கொடுத்துள்ளது. அதேபோன்று தேசிய ரீதியிலான நிதி நெருக்கடிகளுக்கும் திறைசேரி முகங்கொடுத்துள்ளது. இந்த மூன்று காரணிகளே தற்போது நாடு எதிர்கொண்டுள்ள பிரதான காரணிகளாகும். அதற்கான தீர்வை தேட முழு அரசாங்கமும் ஒத்துழைப்புடன் செயற்படுவதுடன், எதிர்க்கட்சிகளும் பொறுப்புடன் நடந்துகொள்ள வேண்டும்.

இத்தகைய நெருக்கடியான சூழலில் தனியாக இந்தப் பிரச்சினைக்கு தீர்வுகாணவும் அரசியல் இலாபங்களை தேடவும் நாம் முற்படவில்லை. எதிர்க்கட்சிகள்மீது குற்றச்சாட்டுகளை சுமத்தவும் தயாரில்லை. நீண்டகாலமாக எமது பொருளாதாரத்தில் ஏற்பட்டிருந்த நெருக்கடிகள் கொவிட் தொற்றுடன் உக்கிரமடைந்துள்ளது. நாட்டின் வருமானத்தைவிட செலவுகள் மீறிச்சென்றுள்ளன. இது ஓர் இரண்டு ஆண்டுகள் அல்ல, பல தசாப்தங்களாக தொடர்கிறது.

நாட்டுக்கும் அரசுக்கும் கிடைக்கும் வருமானமானது செலவீனங்களைவிட மிகவும் குறைவாகும். நிதியை நாசமாக்குவதும் அநாவசியமான செலவீனங்களை மேற்கொள்வது நீண்டகாலமாக தொடர்கிறது. செலவீனங்களை குறைக்கக் கூடிய அனைத்து சந்தர்ப்பங்களிலும் குறைக்கவே எதிர்பார்க்கிறோம். கொவிட் தொற்று காரணமாக அரசுக்கு கிடைக்கவேண்டிய ஆயிரத்து 500 முதல் ஆயிரத்து 600 வரையான பில்லியன் வருமானம் குறைவடைந்துள்ளது. எதிர்பார்க்கப்பட்டதைவிடவும் வருமானம் குறைவடைந்துள்ளது.

நிதி அமைச்சின் கீழ் உள்ள மூன்று பிரதான நிறுவனங்களின் ஊடாகவே நாட்டுக்கு வருமானம் கிடைக்கிறது. சுங்கத் திணைக்களத்தின் மூலம்தான் அதிகமான வருமானம் அரசுக்கு கிடைக்கிறது. அதில் பிரதானமாக வாகனங்கள் இறக்குமதியில் பாரிய வருமானம் கிடைக்கிறது. ஆனால், கடந்த ஒன்றரை வருடமாக வாகனங்கள் இறக்குமதி நிறுத்தப்பட்டுள்ளது. அந்நிய செலாவணியை ஈட்டிக்கொள்ளவே வாகன இறக்குமதி நிறுத்தப்பட்டது. கலால் திணைக்களத்தில் இரண்டாவதாக வருமானம் கிடைக்கப்பெறுகிறது. அதேபோன்று சுற்றுலாத்துறை வீழ்ச்சியடைந்ததால் வருமானம் குறைவடைந்துள்ளது. அடுத்ததாக வெட் வரி மூலம் அரசுக்கு வருமானம் கிடைத்தது. இவ்வருடம் எமக்காக இருந்த வெட் வரியானது பாரியளவில் குறைவடைந்தது. ஒருநாள் நாட்டை முடக்கினாலும் வெட் வரி எமக்கு கிடைப்பதில்லை. வருமானங்கள் குறைவடைந்துள்ள போதும் செலவீனங்கள் குறைவடையவில்லை. தடுப் பூசிகளை பெற்றுக்கொள்ள பாரியளவில் நிதி செலவிடப்படுகிறது. எமக்கு கிடைக்கப்பெற்றுள்ள 80 சதவீதமான தடுப்பூசிகள் நிதியை செலுத்தியே கொள்வனவுகள் இடம்பெற்றுள்ளன. அதேபோன்று ஒட்சிசன் சுகாதார உபகரணங்களையும் கொள்வனவு செய்ய வேண்டியுள்ளது. சுகாதாரத்துறையினருக்கு மேலதிக கொடுப்பனவுகளையும் வழங்க வேண்டியுள்ளது. இதனால் நாம் புதிய மார்க்கத்தை நோக்கி பொருளாதாரத்தை நகர்த்த வேண்டியுள்ளது.

வெளிநாட்டு வருமான வழிமூலங்கள் முற்றாக இல்லாது போயுள்ளன. குறிப்பாக 5 பில்லியன் அமெரிக்க டொலர்கள் ஒவ்வொரு வருடமும் கிடைக்கப்பெற்றன. அதேபோன்று வெளிநாட்டு தொழிலாளர்கள்மூலம் கிடைக்கப்பெற்ற வருமானங்களும் வீழ்ச்சிகண்டுள்ளன. ஏற்றுமதி மூலம் அடுத்தகட்டமாக வருமானத்தை நாம் ஈட்டியிருந்தோம். அந்த விடயத்தில் ஓரளவு மகிழ்ச்சியடையக்கூடியதாக உள்ளது.

தற்போதைய சூழலில் நாட்டுக்கு பிரதிபலன் கிடைக்கக்கூடிய வேலைத்திட்டங்களுக்கு மாத்திரமே கடன்களை பெற்றுக்கொள்கிறோம். முன்னதாக பெற்ற கடன்களையும் நாம் அவ்வாறே செலுத்த வேண்டியுள்ளது. கடன் தவணைகளை கட்டாயமாக செலுத்த வேண்டியுள்ளது. எந்த வொரு கடன் தவணையையும் நாம் செலுத்தா திருக்கவில்லை. கடன் சுமைகளை குறைத்து கடன் இல்லாத நாடாக மாற்றுவதே எமது இலக்காக உள்ளது. பெற்றுக்கொள்ளும் கடன்கள் அனைத்தும் நாட்டின் இறைமைக்கும் சுயாதீனத்துக்கும் பாதிப்பு இல்லாத வகையில் பெற்றுக்கொள்ள நடவடிக்கைகளை எடுத் துள்ளோம். உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கிகளில் அடுத்தவருடம் பொது மக்களுக்கு பயனடையும் வேலைத்திட்டங்களுக்காக கடன்களை பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கிறோம். இவ்வருட இறுதிக்குள் அந்நிய செலாவணி தொடர்பில் ஒரு நல்ல நிலையை எட்டமுடியும். விவசாயிகள் பக்கத்தில் சிறந்த தீர்மானத்தை எடுத்து நாட்டில் உற்பத்திசெய்யக்கூடிய அனைத் தையும் உற்பத்திசெய்ய விவசாயிகளுக்கு சலுகைகளை வழங்கியுள்ளோம். கைத்தொழில் மற்றும் சிறிய, நடுத்தர தொழில்துறையினருக்கு தேவையான உதவிகளை வழங்கியுள்ளோம். நாட்டின் சுகாதாரத்துறைக்குத் தேவையான மருந்து வகைகளை இலங்கையிலேயே உற்பத்திசெய்ய நடவடிக்கையெடுத்துள்ளோம். செப்டெம்பர் முதலாம் திகதிமுதல் சேலைன்கள் முற்றாக இலங்கையிலேயே உற்பத்திசெய்யப்படுகின்றன. இதற்கு முன்னர் நூறு சதவீதமான சேலைன்கள் இறக்குமதியே செய்யப்பட்டிருந்தன.

# இன்றைய ராசி பலன்

நாள்: 08.09.2021 புதன்கிழமை - ஆவணி 23

**ஜோதிடர் நற்பவி**

தொலைபேசி இலக்கம் : 0715346213/0714037141

**நட்சத்திரம்: உத்தரம்** மாலை 3.55 வரை
**அத்தம்** மாலை3.55 - 09.09.2021 பிற்பகல் 2.31 வரை
**யோகம்: சுபம்** அதிகாலை 2.21- இரவு 11.36 வரை
**சுப்ரம்** இரவு 11.36 -09.09.2021 இரவு 8.42 வரை
**திதி: பூர்வ பட்ச துவிதீயை** அதிகாலை 4.37- 09.09.2021 அ.கா 2.34
**கரணம்: பாலவம்** அ.கா 4.37- மாலை 3.37
**கௌலவம்** மாலை 3.37- 09.09.2021 அதிகாலை 2.34 வரை

**சுப நேரங்கள்**
காலை 6.10 - 7.34
பிற்பகல் 1.42 - 3.09

**அசுப நேரங்கள்**

**ராகு காலம்**
பிற்பகல் 12.10 - 1.41

**குளிகை காலம்**
காலை 10.39-பி.ப12.10

**எமகண்ட காலம்**
காலை 7.36 - 9.08

**துர் முகூர்த்தம்**
காலை 11.44 - பி.ப12.33

லோகநாயகி ஸஹஷ்ர சீர்ஷ வதனா அன்னை பிரத்யங்கிராவின் கருணையாலே நற்பவி
நற்பவி நற்பவி

**மேடம்** வழக்கு விடயங்களில் சாதகமான நிலை உண்டாகலாம். வேலைகள் அதிகரிப்பும், ஏற்ற, இறக்க சூழ்நிலையும் உண்டாகலாம்.

**ரிஷபம்** பிள்ளைகளின் கல்வி நிலை மேம்படும். உடல்நலத்தில் சிறிய கவனம் தேவைப்படலாம். இறை தியானம் தரும் மனநிலை சில வீண் விரயங்களை குறைக்கும்.

**மிதுனம்** வியாபார தேவைக்கு கடன் பெறும் சூழ்நிலை ஏற்படலாம். பெற்றோர் உடல்நலத்தில் சிறிய கவனம் தேவைப்படலாம். பணிகளில் அதிருப்தி உண்டாகும். இறைவணக்கம் தீமைகளை குறைக்கும்.

**கடகம்** இல்லத்திலும், வேலைகளிலும் மகிழ்ச்சி உண்டாகும். இறையருளால் உடல்நலமும் மேம்படும். நண்பர்களாலும் மகிழ்ச்சி கிடைக்கும்.

**சிம்மம்** வாகனங்களை கையாளுவதில் கவனம் தேவைப்படலாம். நிதி மற்றும் உறவுகளின் தன்மை கவலை தரலாம். பணிகளில் நிதானம் தேவைப்படலாம்.

**கன்னி** வணிக இலாபங்கள் அதிகரிக்கும். வேலைத்தளங்களில் நன்மைகளும் ஏற்படலாம். விருப்ப நிறைவேறுதல்களும் உண்டாகும். இறையருளால் இன்று நல்ல நாளாக அமையலாம்.

**துலாம்** வீட்டில் வயதில் மூத்தவர்களிடம் கோபத்தை தவிர்ப்பதும், எண்ணங்களை ஒரு நிலைப்படுத்துதலும் நன்மை. வணிகத்தில் சில கவலைகள் உருவாகலாம். வாழ்க்கைத்துணையின் உணர்வுகளில் கவனமாக இருப்பது நன்மை.

**விருச்சிகம்** வீட்டில் உள்ளவர்களின் ஆதரவு மகிழ்ச்சி தரும். வணிக இலாபம் அதிகரிக்கும். பணியிடங்களில் புதிய அதிகாரங்கள் கிடைக்கப் பெறலாம்.

**தனுசு** தம்பதியரிடையே இணக்கம் நிலவும். பணிகளில் திறமை மேம்படும். நண்பர்களாலும் மகிழ்ச்சி உண்டாகும்.

**மகரம்** இயந்திர சாதன வணிகத்தில் இலாபங்கள் அதிகரிக்கும். பணிகளில் அனுபவத்தின் திறமைக்கு அங்கீகாரம் கிடைக்கும். உடல் நலம் இறையருளால் நன்மை கிடைக்கும்.

**கும்பம்** கடன் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் உண்டாகலாம். பணி காரணமான பயணங்கள் ஏற்படலாம். புதிய வேலை மாற்றங்களுக்கான நிலைமை ஏற்படலாம்.
சந்திராஷ்டமம்:
அவிட்டம் நட்சத்திரம்
பாதம் 3/4க்கு
காலை 10.15 வரை
சதயம் நட்சத்திரத்திற்கு
காலை10.15- 09.09.2021
காலை 8.53 வரை

**மீனம்** கடனில் ஒரு சிறிய தொகையை இன்று திரும்ப கொடுத்தால், கடன்கள் நீங்க தொடங்கும். புதிய வேலைகள் துவங்கும் நிலை ஏற்படலாம். இல்லத்து பெண்களின் மகிழ்ச்சி மன நிறைவு தரும்.

# நாட்டிலுள்ள பொருளாதார நெருக்கடிக்கு கடந்த நல்லாட்சி அரசாங்கமே பொறுப்பு

## - இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க சபையில் எடுத்துரைப்பு



நல்லாட்சி அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட வினைத்திறனற்ற பொருளாதார முகாமைத்துவம் மற்றும் பொருத்தமற்ற கொள்கைகள் காரணமாகவே கொரோனா தொற்று தீவிர நிலைமையிலும் பாரதூரமான பொருளாதார நெருக்கடிகள் ஏற்பட்டுள்ளதாக இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற அத்தியாவசிய பொதுச் சேவை சட்டத்தின் கீழான கட்டளை, இலங்கைப் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு சட்டமூலம், உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழான கட்டளைகள், ஏற்றுமதி மற்றும் இறக்குமதி (கட்டுப்பாடு) சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகள் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பொருளாதாரம் முதல்முறையாக வீழ்ச்சியடைய ஆரம்பித்தது 2015ஆம் ஆண்டில்தான். 2015-2019ஆம் ஆண்டுகளில் பொருளாதார வீழ்ச்சி ஏற்பட்டிருந்தது. நல்லாட்சி அரசாங்கத்தில் இருந்தவர்களின் தேவைக்கு ஏற்பட செயல்பட்டிருக்காவிடின் இன்று நாம் கொரோனா தொற்று நிலைமையிலும் பொருளாதார நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்திருக்க வேண்டிய சூழல் ஏற்பட்டிருக்காது.

2015-2019ஆம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட எவ்வித சவால்களும் இல்லாத காலகட்டத்தில் மிகவும் சவால்களுக்கு மத்தியில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவால் கட்டியெழுப்பப்பட்டிருந்த பொருளாதாரத்தை வீழ்ச்சியடைய செய்திருந்தனர். 2019ஆம் ஆண்டு நாம் அரசாங்கத்தை பொறுப்பேற்றுக்கொண்டிருந்த தருணத்தில் பொருளாதாரம் மிக மோசமான நிலையில் இருந்ததுடன், திறைசேரியும் மிகவும் மோசமானதாகவே இருந்தது. இதனை சரிசெய்வதற்கான முயற்சிகள் ஜனாதிபதியால் எடுக்கப்பட்டிருந்த சில மாதங்களிலேயே நாடு கொரோனா தொற்றுக்கு முகங்கொடுக்க நேரிட்டது.

கொரோனா தொற்று காரணமாக 2021ஆம் ஆண்டில் மாத்திரமே ஒதுக்கப்பட்ட நிதிக்கு மேலதிகமாக 350 பில்லியன் நிதியை சுகாதாரத்துறைக்காக செலவிட்டுள்ளது. மக்களுக்காக நாம் அர்ப்பணிப்புடன் செயற்படுகிறோம். சவால்களுக்கும் செலவுகளுக்கும் மத்தியில் அரச ஊழியர்களின் சம்பளத்தில் ஒருசதம்கூட குறைக்கவில்லை. ஓய்வூதியத்தை துண்டிக்கவில்லை.

இறுதி காலாண்டு முதல் நாட்டின் பொருளாதாரத்தில் ஒரு புத்தெழுச்சி ஏற்படும். அதற்கான வேலைத்திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. எதிர்வரும் நிதியாண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தில் இதற்கான பல முன்மொழிவுகள் உள்ளன என்றார்.

# தோட்டப்புற மக்களுக்கு 2 ஆயிரம் ரூபா கொடுப்பனவு முழுமையாக சென்றடையவில்லை

## பிரதேசசபை உறுப்பினர் ராஜ் அசோக் கவலை



நாட்டில் அமுலிலுள்ள தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் காரணமாக குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு அரசாங்கத்தால் நிவாரணத்தொகையாக 2ஆயிரம் ரூபா வழங்க அனுமதிக்கப்பட்டுள்ள போதிலும் மலையகத்தில் இந்த நிவாரணத்தொகை ஒரு சிலருக்கு மாத்திரமே வழங்கப்பட்டுள்ளது.

2 ஆயிரம் ரூபா பெற தகுதி இருந்தபோதிலும் சிலருக்கு இத்தொகை வழங்கப்படாமை வேதனையாகவுள்ளதாக மஸ்கெலியா பிரதேசசபை உறுப்பினர் ராஜ் அசோக் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது.

ஒவ்வொரு தோட்டப்புறங்களுக்கும் சுமார் 30 பேர், 20 பேர் என தெரிவு செய்யப்பட்டு 2 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கப்படுகின்றது. இத்தொகை கிடைக்கப்பெறாதவர்களால் மாவட்ட செயலாளர், பிரதேச செயலாளர்களுக்கு மேலதிகமாக விண்ணப்பப்படிவம் பூர்த்தி செய்து கொடுக்கப்பட்டுள்ளது. ஆனாலும் இதுவரையும் அதற்கான எந்த பதிலும் வழங்கப்படவில்லை. மேலதிகமாக, கிராம உத்தியோகத்தருக்கும் விண்ணப்பங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இதனால் அன்றாடம் தினக் கூலி வேலை செய்பவர்கள், ஆட்டோ சாரதிகள், இசை கலைஞர்கள், மேள வாத்திய கலைஞர்கள், வாடகைக்கு வாகனம் வாங்கி ஓட்டுபவர்கள், கொந்தஸ்தர்கள் மற்றும் பாஸ்மார்கள் என பலரும் வருமானமின்றி பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் 2ஆயிரம் ரூபா பெறுவதற்கு விண்ணப்பங்களை கொடுத்துவிட்டு கிடைக்கும் என்ற நம்பிக்கையில் இருக்கின்றார்கள். இவ்விடயம் தொடர்பில் சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் பிரதேச சபை உறுப்பினர் தெரிவித்துள்ளார்.

# அமைச்சுகளில் உள்வாங்கப்படாத நிறுவனங்களுக்கென விசேட குழு

## சபாநாயகர் சபையில் அறிவிப்பு

*(சபை செய்தியாளர்கள்)*

தற்போதுள்ள அமைச்சுகளின் கீழ் உள்வாங்கப்படாத அரச நிறுவனங்களால் நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்படுகின்ற விடயங்கள் தொடர்பில் ஆராய்வதற்கான நாடாளுமன்றத்தின் விசேட குழுவில் சேவையாற்றுவதற்கான குழு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் நியமிக்கப்பட்டுள்ளதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவினால் சபைக்கு நேற்று (07)அறிவிக்கப்பட்டது.

இந்தக்குழுவில் அமைச்சர்களான ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, ஜீ.எல். பீரிஸ், அலி சப்ரி மற்றும் எம்.பி.க்களான லக்ஷ்மன் கிரியெல்ல, கோவிந்தன் கருணாகரம் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர் எனவும் சபாநாயகர் அறிவித்தார்.

# வைத்தியசாலைகளுக்கு பாதுகாப்பு உடைகள் வழங்கி வைப்பு




*(எம்.எஸ்.எம்.ஸாகிர்)*

ஐக்கிய இளைஞர் சக்தியின் வன்னி மாவட்ட செயலாளர் லக்ஷயன் முத்துகுமாரசாமியினால் கடந்த திங்கட்கிழமை ஒரு தொகுதி சுகாதார பாதுகாப்பு உடைகள் வழங்கி வைக்கப்பட்டன.

இந்தப் பாதுகாப்பு உடைகள் மாங்குளம் ஆதார வைத்தியசாலை மற்றும் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலை ஆகியவற்றுக்கு வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## கொரோனா தொற்றுக்குள்ளானோர் விபரம்

| மொத்த பாதிப்பு | சிகிச்சை பெறுவோர் | குணமடைந்தோர் | புதிதாக அடையாளம் | மரணம் |
|---|---|---|---|---|
| 4,68,899 | 70,301 | 3,88,278 | 3,152 | 10,320 |

# அநுராதபுர போதனா வைத்தியசாலையில் அதிகளவான கொரோனா சடலங்கள்

## மின் தகனசாலை செயலிழந்துள்ளதால் அவலநிலை

*(அநுராதபுரம் நிருபர் )*

கொரோனா தொற்றினால் உயிரிழப்பவர்களின் சடலங்களை தகனம் செய்வதில் ஏற்பட்டுள்ள தாமதம் காரணமாக அதிகளவிலான சடலங்கள் குவிந்துள்ளதாக அநுராதபுரம் போதனா வைத்தியசாலையின் உயர் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

அநுராதபுரம் பொது மயானத்தில் அமைக்கப்பட்டுள்ள மாநகர சபையினால் நிர்வகிக்கப்படும் மின்சார தகனசாலை, கடந்த சில தினங்களாக செயலிழந்துள்ள காரணத்தினாலேயே இந்நிலமை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஒரு நாளைக்கு ஆறுக்கு மேற்பட்ட சடலங்களை அநுராதபுரம் பொது மையானத்தில் அமைக்கப்பட்டுள்ள மின்சார தகனசாலையில் தகனம் செய்யப்பட்டு வந்த நிலையிலேயே இந்நிலைமை உருவாகியுள்ளதாக சுகாதார தரப்பினர் தெரிவித்தனர்.

அநுராதபுரம் பண்டுலகம பகுதியில் மத்திய நுவரகம்பலாத்த பிரதேச சபையினால் நிர்வகிக்கப்படும் மின்சார தகனசாலையில் தற்சமயம் தகனம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது

அதில் ஒரு நாளைக்கு மூன்று அல்லது நான்கு கொரோனா சடலங்களை மாத்திரமே தகனம் செய்ய முடியும் நிலை காணப்படுவதாக சுகாதார தரப்பினர் மேலும் தெரிவித்தனர்.இந் நிலமையை கருத்தில் கொண்டு மிக விரைவில் அநுராதபுரம் பொது மயானத்திலுள்ள மின்சார தகன சாலையை திருத்தி வழமை நிலைக்கு கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# பஸ் - மோட்டார் சைக்கிள் மோதி விபத்து: ஒருவர் உயிரிழப்பு

*(வவுனியா நிருபர்)*

வவுனியாவில் கடற்படைக்கு சொந்தமான பஸ்ஸூடன் மோட்டார் சைக்கிள் மோதியதில் இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

ஈரப்பெரியகுளம் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இவ்விபத்தில், ஈரப்பெரியகுளம் பகுதியை சேர்ந்த 28 வயதுடைய அனுஸ்க அபயரத்தின லக்மால் என்ற இளைஞனே சம்பவ இடத்தில் பலியாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். சடலம் வவுனியா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன், இவ்விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகள் ஈரப்பெரியகுளம் பொலிஸ் பொறுப்பதிகாரி சுகந்தன் தலைமையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# சாவகச்சேரி வைத்தியசாலையில் கொரோனா சடலங்களை பாதுகாக்க முடியாத நெருக்கடி

*(சாவகச்சேரி நிருபர்)*

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் பிரேத அறையிலுள்ள குளிரூட்டியில் கொரோனா தொற்று காரணமாக உயிரிழந்த சடலங்களுடன் ஏனைய சடலங்களையும் ஒன்றாக வைத்திருக்க வேண்டிய அபாயகரமான நிலைமை உருவாகியுள்ளதாக சுட்டிக்காட்டப்படுகிறது.

இதன் காரணமாக சுகாதாரப் பணியாளர்கள், மரண விசாரணை அதிகாரிகள், பொலிஸார் மற்றும் மரணமடைவோரின் உறவுகள் பாதிப்பை எதிர்கொள்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை நிர்வாகத்தினரை வினவிய போது,

வைத்தியசாலையில் சடலங்களை பாதுகாப்பாக வைப்பதற்கு ஒரேயொரு குளிரூட்டி வசதி மாத்திரமே காணப்படுகிறது. தற்போது மாவட்டத்தில் கொரோனா சடலங்களை உடனடியாக மின் தகனம் செய்ய முடியாத நிலைமை காணப்படுவதனால் வைத்தியசாலையின் பிரேத அறையில் உள்ள குளிரூட்டியில் உரிய முறையில் பொதி செய்யப்பட்டு பாதுகாப்பாக வைக்கப்படுகிறது.

கொரோனா சடலங்கள் பெருமளவில் தேங்கும் நிலைமை காணப்படுவதால் உறவினர்கள் சடலங்களை வேறு மாவட்டங்களில் மின் தகனம் செய்வதற்கு அனுமதி வழங்க வேண்டும். சகல வைத்தியசாலைகளிலும் தற்போது இவ்வாறான நெருக்கடி நிலைமை காணப்படுவதாக மேலும் வைத்தியசாலை நிர்வாகத்தினர் சுட்டிக்காட்டியிருந்தனர்.

# புனரமைக்கப்பட்ட களுத்துறை மருத்துவமனையின் ஏழாம் நோயாளர் பிரிவு பாவனைக்கு கையளிப்பு

*(பீ.எம் முக்தார்)*



பேருவளை மருதானை 'செரிடி' அமைப்பினால் களுத்துறை பொது மருத்துவமனையின், ஏழாம் நோயாளர் பிரிவு புனர்நிர்மாணம் செய்யப்பட்டுள்ளது.

இதற்காக 22 இலட்சம் ரூபா நிதி செலவிடப்பட்டுள்ளது. புனர்நிர்மாணம் செய்யப்பட்ட மேற்படி 'வாட்' வைத்தியசாலை நிர்வாகத்திடம் கையளிக்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் மாலை மருதானை 'செரிடி' அமைப்பின் தலைவர் தஸ்தகீர் பாச்சா தலைமையில் நடைபெற்றது.

மேற்படி வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் பிரதீப் ரத்னசேகர, பிரதிப்பணிப்பாளர் வைத்தியர் சிந்தா குணரத்ன, வைத்தியர்களான மர்ஜான் ஹுஸைன், முஹம்மத் ஆமிர் உட்பட விசேட வைத்திய நிபுணர்கள், ஏழாம் நோயாளர் பிரிவுக்கும் பொறுப்பான வைத்திய அதிகாரி மற்றும் ஊழியர்கள், மருதானை 'செரிடி' அமைப்பின் செயலாளர், சிரேஷ்ட ஊடகவியலாளர் ரூமி ஹாரிஸ் மற்றும் உறுப்பினர்கள், பேருவளை மாளிகாஹேனை ஸேம் ரிபாய் ஹாஜியார் தேசிய பாடசாலை அதிபர் எம்.எப்.எம் நழ்ரி, மருதானை வத்திமிராஜபுர யாஸிர் அரபாத் பள்ளிவாசல் பிரதம இமாம் மௌலவி முஹம்மத் ரஸ்மி உட்பட பலரும் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் பிரகடனப்படுத்தப்பட்ட அவசரகாலச் சட்டத்துக்கு நாடாளுமன்றம் அங்கீகாரம் வழங்கியுள்ளது. இது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட வாக்கெடுப்பு 81 வாக்குகளால் நேற்றுமுன்தினம் நிறைவேறியது.

நாடாளுமன்றத்தில் அவசரகால ஒழுங்குவிதிகள் மீதான விவாதம் இடம்பெற்றபோது உறுப்பினர்களால் தெரிவிக்கப்பட்ட சில கருத்துகள் கட்டாய அவதானத்துக்குரியவை.

குறிப்பாக ஜனாதிபதியின் இந்தச் செயற்பாடானது அவரது அதிகாரங்களை மேலும் அதிகரிப்பதாக உள்ளதே தவிர மக்களின் நலன்சார்ந்து முன்னெடுக்கப்படவில்லையென எதிர்க்கட்சிகள் சுட்டிக்காட்டியிருந்தன.

மூன்றில் இரண்டு பெரும்பான்மை அரசாங்கம் இருந்தும் 20 ஆவது திருத்தத்தின் ஊடாக நிறைவேற்று அதிகாரம் கிடைக்கப்பெற்றும் அதனையும் தாண்டி சகல சாதாரண சட்டங்களை மீறிய விதத்தில் செயற்பட வேண்டும் என்ற ஒரே நோக்கத்துக்காகவே ஜனாதிபதி அவசரகால நிலைமையை நடைமுறைப்படுத்தியுள்ளார். இது ஜனநாயக அடக்குமுறையின் உச்சகட்டம் என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அனுரகுமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

“நாட்டில் ஏற்பட்டுள்ள விலைவாசி அதிகரிப்புக்கு பிரதான காரணிகள் உள்ளன. நீண்டகால பொருளாதார கொள்கை முக்கியமான காரணியாகும். அதேபோல் அண்மைக்கால பொருளாதார நெருக்கடி நிலைமைகள், அவ்வப்போது அரசாங்கம் எடுக்கும் கொள்கை ரீதியான தீர்மானங்களும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. இதனைக் கட்டுப்படுத்த ஜனாதிபதியாலும் அரசாங்கத்தாலும் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் என்ன?

அதிகார மோகம் மட்டுமே இவர்களின் எண்ணத்தில் உள்ளது. அவசரகால நிலைமைகளைக் கட்டுப்படுத்த அவசரகாலச் சட்டம் வேண்டும் எனக் கூறி அதற்கு இடங்கொடுத்தால் அதனை சாதகமாக வைத்துக்கொண்டு சகல விடயங்களிலும் ஜனாதிபதி தலையிட நேரிடும். அதற்கான அதிகாரத்தையே ஜனாதிபதி கேட்கின்றார்”

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91. விஜேராம மாவத்தை. கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2021, செப்டெம்பர் 08ஆம் திகதி, புதன்கிழமை

# அவசரகாலச் சட்டத்தினூடாக அடக்குமுறை நடக்கக் கூடாது!

என அனுரகுமார திசாநாயக்க மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, நுகர்வோர் சட்டங்கள், ஒழுங்குவிதிகள் இருக்கும்போது அவசரகாலச் சட்டம் கொண்டுவரப்பட்டமைக்கான காரணம் என்னவென ஐக்கிய மக்கள் சக்தி கேள்வி எழுப்பியுள்ளது. அக்கட்சியின் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரஞ்சித் மத்தும பண்டார நாடாளுமன்றத்தில் இந்தக் கேள்வியை முன்வைத்தார்.

“கொரோனாவை கட்டுப்படுத்தவோ பொருட்களின் விலையைக் கட்டுப்படுத்தவோ இந்தச் சட்டம் கொண்டுவரப்படவில்லை. மாறாக, மக்களின் எதிர்ப்புகளை கட்டுப்படுத்தவும் அவர்களை ஒடுக்கவுமே சட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது. இராணுவத்தினர் யுத்தம் புரிவதையே செய்ய வேண்டும். அவர்களால் சிவில் நிர்வாக சேவையுடன் தொடர்புடைய பணிகளைச் செய்ய முடியாது. இந்த நாட்டில் நிர்வாக சேவையில் அதிகாரிகள் யாரும் இல்லையா? நுகர்வோர் பாதுகாப்பு ஆணையாளராக ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல், மாவட்ட செயலாளர்களுக்கு உத்தரவிடும் நிலைமை ஏற்பட்டுள்ளது. ஓய்வுபெற்ற சிவில் சேவை அதிகாரிகள் யாரும் இல்லையா? இந்தச் சட்டம் மக்களுக்கு எதிராகவே கொண்டுவரப்பட்டுள்ளது” என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். அத்துடன் தான்தோன்றித்தனமாக சட்டங்களை உருவாக்கும் முயற்சியில் ஜனாதிபதி ஈடுபட்டுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு குற்றம் சுமத்தியுள்ளது.

நாட்டை அவசரகால நிலைக்கு தள்ளிவிட்டால் ஜனாதிபதியால் ஏனைய அவசரகாலச் சட்டங்களை இரவோடு இரவாக கொண்டுவர முடியும் என்பதாலேயே இச்சட்டம் நிறைவேற்றப்படுகிறது. கபடத்தனமாக அரசாங்கம் முன்னெடுத்துள்ள இந்தச் செயல்பாட்டை வன்மையாகக் கண்டிக்கிறோம் என கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் கருத்து வெளியிட்டுள்ளார்.

சீனி பதுக்கப்பட்டுள்ளதாக அரசாங்கம் கூறுவதானால் பதுக்கியவர்களுக்கு எதிராக ஏன் நீதிமன்ற நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவில்லை? அரசாங்கம் மக்களை ஏமாற்றுவதற்கு நாடகம் ஆடுகிறது என நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். மரிக்கார் குறிப்பிட்டார்.

இவ்வாறானதொரு நிலையில், கோட்டாபய ராஜபக்ஷ போன்ற சர்வாதிகாரியொருவரே நாட்டுக்குத் தேவை என இராஜாங்க அமைச்சர் அருந்திக பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இந்தக் கருத்துகளை ஆராயும்போது உண்மையில் மக்கள் நலன் சார்ந்தா ஜனாதிபதியால் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது என்ற கேள்வி எழுகிறது. சிவில் நிர்வாகம் முறையாக முன்னெடுக்கப்படுமா என்ற சந்தேகமும் எழுகிறது.

அரசாங்கத்தின் பெரும்பான்மை பலத்தைப் பயன்படுத்தி அவசரகாலச் சட்டம் நடைமுறைக்கு வந்துள்ளது. அந்தச் சட்டம் அடக்குமுறைகளுக்கான ஆயுதமாக பயன்படுத்தப்படக் கூடாது என்பதில் ஜனாதிபதியும் அரசாங்கமும் நிலையான கொள்கையைப் பின்பற்ற வேண்டியது அவசியம் என்பதை வலியுறுத்த விரும்புகிறோம்.

# ஆப்கானிஸ்தானில் ஆழமாகக் கால் பதிக்கும் சீனா



அமெரிக்கா, இந்தியா ஆகிய இரண்டு நாடுகளின் கண்காணிப்பில் ஆப்கானிஸ்தான் இருந்தபோது அதிக ஈடுபாடு இல்லாமல் இருந்த சீனா இப்போது அதிக அக்கறை காட்டுகிறது. ஆப்கானிஸ்தானை தலிபான்கள் கைப்பற்றியபோது உலக நாடுகள் அனைத்தும் அதிர்ச்சியுடன் பார்த்தபோது சீனா முந்திக்கொண்டு ஆதரவு தெரிவித்தது.



உலக நாடுகளுடன் நட்புறவு பாராட்ட விரும்பும் தலிபான்கள் அமெரிக்காவுடனும், இந்தியாவுடனும் நெருக்கமாக செயற்பட மாட்டார்கள். அந்த இடத்தை நிரப்ப சீனா முயற்சிக்கிறது. இந்தியாவுக்கு எதிரான புதிய ஒரு எல்லை உருவாகுவதை சீனா விரும்புகிறது. இந்தோ - பசுபிக் பிராந்தியத்தில் இந்தியாவின் செல்வாக்கு வளர்ந்து வருவதை தடுக்க, இந்தியாவின் அண்டை நாடுகளை வளைத்துள்ளது போல், ஆப்கானையும் கைக்குள் வைக்க சீனா முயற்சிக்கிறது

இலங்கை, பங்களாதேஷ், நேபாளம் என பல நாடுகளை சீனா கைக்குள் வைத்துள்ளது. உள்கட்டமைப்பு வசதிகளை செய்வதாக இந்த நாடுகளில் அதிக அளவில் முதலீடுகள் செய்து, அவற்றை தன் கட்டுப்பாட்டில் சீனா வைத்துள்ளது. திபெத் அதன் முழு கட்டுப்பாட்டில் உள்ளது. இவ்வாறு அருகில் உள்ள அனைத்து நாடுகளையும் வளைத்து, இந்தியாவுக்கு மிகப் பெரும் பாதுகாப்பு அச்சுறுத்தலாக சீனா விளங்கி வருகிறது. எதிர்காலத்தில் போர் ஏற்பட்டால் தன் படைகளை அந்த நாடுகளில் நிலைநிறுத்தி இந்தியாவுக்கு நெருக்கடி கொடுப்பது





அதன் திட்டம். நேரடியாக போரில் ஈடுபடாவிட்டாலும், இந்தியாவுக்கு பாதுகாப்பு மற்றும் பொருளாதார நெருக்கடிகளை சீனா நிச்சயம் ஏற்படுத்தும்.

ஆப்கானிஸ்தானுக்கும் இந்தியாவுக்கும் இடையில் செய்யப்பட்ட வர்த்தக பொருளாதார ஒப்பந்தங்கள் அனைத்தும் கைவிடப்படும் நிலையில் உள்ளன. அந்த இடத்தை சீனா கெட்டியாகப் பிடிக்க சந்தர்ப்பம் உள்ளது. ஆப்கானிஸ்தானுக்கு உட்கட்டமைப்பு வசதிகள் தேவையாக உள்ளது. சீனா முன்னின்று அதனை நிறைவேற்றும்.

ஆப்கானிஸ்தானூடாக பல நாடுகளை சீனாவுடன் இணைக்கும், பிரமாண்ட சாலை திட்டத்துக்கு இடையூறு ஏற்படக் கூடாது என்பது ஒரு காரணம். தங்கள் நாட்டுக்குள் இந்த திட்டத்தை செயல்படுத்த சீனாவுக்கு தலிபான்கள் அனுமதிக்க வேண்டும். மற்றொன்று, ஜின்ஜியாங் மாகாணத்தில் உள்ள உய்குர் முஸ்லிம்களுக்கு எதிராக சீனா அடக்குமுறையை ஏவி விட்டுள்ளது. இந்நிலையில் கிழக்கு துர்கிஸ்தான் அமைப்பு என்ற பயங்கரவாத அமைப்பு, உய்குர் முஸ்லிம்களுக்கு ஆதரவாக போராட்டத்தில் ஈடுபட்டு வருகிறது. இந்த அமைப்பு ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான், மத்திய ஆசிய நாடுகளான கஜகஸ்தான், கிர்கிஸ்தான், தஜிகிஸ்தானில் வலுவாக உள்ளது.

ஆப்கானுடன் 80 கி.மீ., நீள எல்லையை சீனா பகிர்ந்து கொள்கிறது. அதில் பெரும்பகுதி ஜின்ஜியாங் மாகாணத்தில் வருகிறது. அதனால், தன் எல்லையில் பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்துவதை தவிர்க்க சீனா விரும்புகிறது. தலிபான் அமைப்பின் முக்கிய தலைவர்கள் சீனாவுக்கு பயணம் மேற்கொண்டு சீன வெளியுறவு அமைச்சர் வாங்க் யீயை சந்தித்து பேசினர். அப்போது, இந்த பயங்கரவாத அமைப்பினர் எங்கள் எல்லையை பயன்படுத்த அனுமதிக்க மாட்டோம் என, தலிபான் உறுதி அளித்துள்ளது.

பல வகையான தாதுக்கள் அடங்கிய அரிய பூமி ஆப்கானிஸ்தான். சுமார் 1 டிரில்லியன் டொலர் மதிப்பினால் ஆன பூமியின் மீது ஆப்கானிஸ்தான் அமர்ந்துள்ளது. பொருளாதாரம், நிதி ரீதியாக பின்னடைவில் இருக்கும் ஆப்கானிஸ்தானுக்கு உதவ உலக நாடுகள் பின் வாங்கியிருந்தாலும், தற்போது சீனா உதவலாம் என்ற கருத்தும் நிலவி வருகின்றது. ஆப்கானில் உள்கட்டமைப்பு வசதியினை மேம்படுத்துதல், தொழில் கட்டமைப்பு வாய்ப்புகள் மற்றும் பயன்படுத்தப்படாத 1 டிரில்லியன் டொலர் மதிப்பிலான விலையுயர்ந்த கனிமங்களை அணுகுதல் என சீனாவுக்கு தேவையானதாக உள்ளது.

தலிபான்களுக்கு உதவ எந்த ஒரு நாடும் இப்போது தயாராக இல்லை. தலிபானுக்கு உதவ ஒரு பலமான நாடு தேவை. இதனால் சீனாவை தலிபான்கள் ஏற்றுக் கொள்ளலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. சீனாவும் ஆப்கானிஸ்தானில் முதலீடு செய்ய தயாராக இருப்பதாக தெரிகிறது. இதன் மூலம் சீனா 1 டிரில்லியன் கனிமங்களை எடுப்பதிலும் உதவி செய்யலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

சீனாவின் உதவியுடன், தலிபான்கள் ஆப்கானிஸ்தானில் பொருளாதார மீட்சிக்கு போராடுவார்கள் என்று தலிபான் செய்தித் தொடர்பாளர் ஜபிஹுல்லா முஜாஹித் இத்தாலிய செய்தித்தாளிடம் கூறினார். சீனாவிடம் இருந்து பெரும் உதவிகளை தலிபான்கள் எதிர்பார்ப்பதை இது வெளிப்படுத்துகிறது. ஆப்கானிஸ்தானில் உள்ள தனது தூதரகத்தை திறந்து வைக்க சீனா உறுதி அளித்துள்ளதாகவும் மாட்டிறைச்சி உறவை சீனா பராமரிக்கும் என்றும் தலிபான் செய்தித் தொடர்பாளர் கூறுகிறார்.

“சீனா எங்கள் மிக முக்கியமான பங்குதாரர் மற்றும் எங்களுக்கு ஒரு அடிப்படை மற்றும் அசாதாரண வாய்ப்பை பிரதிபலிக்கிறது. ஏனென்றால் அது நம் நாட்டை முதலீடு செய்து மீண்டும் கட்ட தயாராக உள்ளது” என்று தலிபான் செய்தித் தொடர்பாளர் பேட்டியில் கூறினார். வர்த்தகப் பாதைகளைத் திறப்பதன் மூலம் சீனா தனது உலகளாவிய செல்வாக்கை அதிகரிக்க விரும்பும் உள்கட்டமைப்பு முயற்சியான புதிய சில்க் சாலை - தலிபான்களால் மதிக்கப்படுவதாக அவர் கூறினார்.

ஆப்கானிஸ்தானில் உள்ள செப்புச் சுரங்கங்களை இயக்குவதற்கு சீனாவின் உதவியை தலிபான்கள் நாடக்கூடும். விமான நிலையங்களை இயக்குவதற்கான தொழில் நுட்ப உதவிகளையும் சீனாவிடம் இருந்து தலிபான்கள் பெறுவதற்கான சந்தர்ப்பம் உள்ளது.

சில சிறிய அளவிலான முதலீடுகளை



சீனா செய்யக்கூடும். ஆனால் அந்த நீண்ட கால முதலீடுகள் நாட்டில் போதுமான நிலைத்தன்மை மற்றும் நாட்டில் போதுமான பாதுகாப்பு இருப்பதைப் பொறுத்தது. இவை பொருளாதார ரீதியாக சாத்தியமான ஒன்றாக மாறும். ஆனால், தலிபான்கள் சில வரம்புகளை விதித்தே உதவியைப் பெறுவார்கள்.

இன்றைய நாளில் இலத்திரனியல் சாதனங்கள் உற்பத்தியில் முக்கிய பங்கு வகிக்கும் சீனாவுக்கு, ஆப்கானில் உள்ள கனிமங்கள் தேவை. குறிப்பாக பட்ரிகளில் பயன்படுத்தப்படும் லித்தியத்திற்கு தேவை அதிகம் உள்ளது. சீனாவின் குறி ஆப்கானில் இருக்கும் தாதுக்கள் என்பதால், மெதுவாக ஆப்கானிஸ்தானுக்கு தனது ஆதரவினை கொடுக்க தொடங்கியுள்ளது. இது அமெரிக்காவின் முன்னணி நிறுவனங்களான அப்பிள், டெஸ்லா நிறுவனங்களுக்கு போட்டியாக அமையலாம் எனவும் கருத்துகள் நிலவி வருகின்றன. மொத்தத்தில் நேரம் பார்த்து காய் நகர்த்த தொடங்கியுள்ளது சீனா.

அமெரிக்காவுக்கு இணையான ஒரு நாடு தலிபான்களுக்குத் தேவையாக உள்ளது. அது சீனாவாகத்தான் இருக்க முடியும்.

**-ரமணி-**

# கலப்பு தேர்தல் முறையே நடைமுறைச் சாத்தியம்

## நாடாளுமன்ற விசேட குழுவின் முன்னிலையில் மக்கள் ஐக்கிய முன்னணி வலியுறுத்து

தொகுதிவாரி மற்றும் விகிதாசார பிரதிநிதித்துவத்துடன் கூடிய கலப்பு தேர்தல் முறை நாட்டுக்கு அவசியமென தேர்தல் சட்டங்கள் மற்றும் தேர்தல் முறைமை தொடர்பாகப் பொருத்தமான சீர்திருத்தங்களை அடையாளம் காண்பதற்கும் தேவையான திருத்தங்களைப் பரிந்துரைப்பதற்குமான நாடாளுமன்ற விசேட குழுவில் மக்கள் ஐக்கிய முன்னணி நேற்று முன்தினம் (06) தெரிவித்துள்ளது.

அதற்கமைய, தற்போது நடைமுறையிலுள்ளது போன்று நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 225ஆக இருக்க வேண்டும் என்றும், இதில் 140 பேர் தொகுதிவாரி முறையின் அடிப்படையிலும், 70 பேர் மாவட்ட அடிப்படையிலும், எஞ்சிய 15 பேர் தேசியப் பட்டியலினூடாகவும் தெரிவுசெய்யப்பட வேண்டும் எனவும் அந்தக் கட்சியின் உபசெயலாளரும் இராஜாங்க அமைச்சருமான சிசிர ஜயகொடி விசேட குழு முன்னிலையில் தெரிவித்தார்.





தேர்தல் சட்டங்களில் புதிய திருத்தங்களை மேற்கொள்ளும்போது, தற்போது நடைமுறையிலுள்ள முழு நாட்டையும் ஒரு தொகுதியாகக் கருதி நடத்தப்படும் ஜனாதிபதி தேர்தல் முறை அல்லது நாடாளுமன்ற உறுப்பினர்களின் வாக்குகளினால் ஜனாதிபதியைத் தெரிவு செய்வது தொடர்பில் கட்டாயம் ஆராயப்பட வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

தேவை ஏற்பட்டால் இடைத்தேர்தல் நடத்துவதற்கான வாய்ப்புகள் குறித்தும் ஆராயப்பட வேண்டும் என்றும் அந்தக் கட்சி சுட்டிக்காட்டியது.

அத்துடன், அரசியல் ஆட்சி அதிகாரம் அழுத்தங்களின்றி, தேர்தல்கள் நடத்தப்பட வேண்டிய காலம் மற்றும் திகதி என்பன சட்டத்தினால் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என மக்கள் ஐக்கிய முன்னணியின் உதவிச் செயலாளர் நாடாளுமன்ற உறுப்பினர் யதாமினி குணவர்த்தன இந்தக் குழு முன்னிலையில் தெரிவித்தார்.

அரச மற்றும் தனியார் அச்சு ஊடகங்கள், இலத்திரனியல் ஊடகங்கள் மற்றும் இணைய ஊடகங்களால் வேட்பாளர்களின் சமத்துவத்துக்கு தீங்கிளைக்கும் வகையில் மேற்கொள்ளப்படும் பிரசாரங்களைத் தடுப்பதற்கு சட்ட ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

புதிய தேர்தல் திருத்தத்தினூடாக சகல இனக் குழுக்களினதும் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும் என விசேட குழு முன்னிலையில் சாட்சியமளித்த ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி சுட்டிக்காட்டியது. உறுப்பினர்களைத் தேர்வுசெய்யும்போது அடிப்படைக் கொள்கையாக 65 வீதம் தொகுதிவாரி முறையும், 35 வீதம் விகிதாசார முறையும் அமைய வேண்டும் என அந்தக்கட்சி நாடாளுமன்ற விசேட குழுவின் முன்னிலையில் தெரிவித்தது.

பிரதானமாக தொகுதிவாரி முறை நாட்டுக்கு அவசியமானது என தேசவிமுக்தி மக்கள் கட்சி நாடாளுமன்ற விசேட குழு முன்னிலையில் தெரிவித்தது. புதிய திருத்தங்களினூடாக சகல கட்சிகளின் பிரதிநிதித்துவம் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என அக்கட்சி சுட்டிக்காட்டியது. நாடாளுமன்றத் தேர்தல், மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் பொதுவான முறையின் கீழ் நடத்தப்படுவதன் அவசியத்தையும் அந்தக் கட்சி வலியுறுத்தியது.

சபை முதல்வர் அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தலைமையில் கூடிய இக்கூட்டத்தில் அமைச்சர்களான நிமல் சிறிபால டி சில்வா, டக்ளஸ் தேவானந்தா, பவித்திரா வன்னியாராச்சி, அலி சப்ரி ஆகியோரும் நாடாளுமன்ற உறுப்பினர்களான மனோ கணேசன், மதுர விதானகே, சாகர காரியவசம் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

தேர்தல் சட்டங்கள் மற்றும் தேர்தல் முறைமை தொடர்பாகப் பொருத்தமான சீர்திருத்தங்களை அடையாளம் காண்பதற்கும் தேவையான திருத்தங்களைப் பரிந்துரைப்பதற்குமான நாடாளுமன்ற விசேட குழுவில் முன்வைக்கப்பட்டுள்ள முன்மொழிவுகளை பகுப்பாய்வு செய்வதற்காக நியமிக்கப்பட்ட நிபுணர்கள் குழுவின் உறுப்பினர்களான ஸ்ரீஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் உப வேந்தர் பேராசிரியர் சுதந்த லியனகேவும் இச்சந்தர்ப்பத்தில் கலந்துகொண்டிருந்தார்.

## கொரோனா தொற்றால் ஓய்வுபெற்ற பொலிஸ் அதிகாரியொருவர் உயிரிழப்பு

(சாவகச்சேரி நிருபர்)

கொரோனா தொற்றுக்குள்ளாகி முன்னாள் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் உயிரிழந்துள்ளதாக சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

கொரோனா தொற்றுக்குள்ளாகிய நிலையில் இவர் கடந்த 21ஆம் திகதி சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைப் பெற்று வந்துள்ளார்.

இந்நிலையில் சிகிச்சைப் பலனின்றி நேற்று காலை உயிரிழந்ததாக சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

கண்டி வீதி, சாவகச்சேரி பிரதேசத்தைச் சேர்ந்த 72 வயதான ஐ.பரமேஸ்வரன் என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார். இவர் ஓய்வுநிலை பொலிஸ் உத்தியோகத்தர்.

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் இரு தினங்களுக்குள் மூவர் கொரோனா தொற்றால் உயிரிழந்துள்ளதுடன், இதுவரை வைத்தியசாலையின் கொரோனா விடுதியில் சிகிச்சைப் பெற்று வந்த எட்டுப் பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத் தக்கது.

## விழுதுகள் அமைப்பினால் பிட்டகந்தயை சேர்ந்த 155 குடும்பங்களுக்கு நிவாரணப் பொருட்கள் வழங்கி வைப்பு



நாட்டு மக்கள் அனைவரும் கொரோனா நோய்த்தொற்று காரணமாக வாழ்வாதாரம் பாதிப்படைந்த நிலையில் உள்ளனர். அந்தவகையில் நல்லுள்ளங்களிடமிருந்து பணம் சேகரிக்கப்பட்டு விழுதுகள் அமைப்பினூடாக பிட்டகந்த கிராமத்தில் வசிக்கும் 155 குடும்பங்களுக்கு 1 இலட்சத்து 10 ஆயிரம் ரூபா பெறுமதியான நிவாரணப் பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டன.

சதீஸ் அருணாசலம்பிள்ளை, ரூபா பிரகாஷ், மலர் செல்வ மனோகரன், பஞ்சேந்திரராஜன், ரோட்டரி அமைப்பு மாத்தளை தலைவர் உட்பட அங்கத்தவர்கள் அனைவரும் ஒன்றிணைந்து இதற்கான நிதியுதவியினை வழங்கியிருந்ததாக விழுதுகள் அமைப்பு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் அந்த அமைப்பு மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

இந்த இக்கட்டான காலத்திலும் தன்னிலை மறந்து உதவிட முன்வந்த அனைத்து உள்ளங்களுக்கும் விழுதுகள் அமைப்பின் சார்பாகவும், கிராம பொது மக்கள் சார்பாகவும் அனைவருக்கும் நெஞ்சார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

மற்றும் நமது விழுதுகள் அமைப்பில் நம்பிக்கை கொண்டு முதல் நிதியுதவியினை வழங்கிய சதீஸ் அருணாசலம்பிள்ளை மற்றும் வேலைத்திட்டத்திற்கு மேலும் நிதியினைத் திரட்டி உதவிட முன்னின்ற ராம்திலக் மற்றும் ரோட்டரி அமைப்பு தலைவர், அங்கத்தவர்கள் அனைவருக்கும் விழுதுகள் அமைப்பின் சார்பாகவும் கிராம பொது மக்கள் சார்பாகவும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மேலும் இவ் வேலைத்திட்டம் மூன்று இடங்களில் ஒழுங்கமைக்கப்பட்டு சிறப்பான முறையில் நிகழ ஒத்துழைப்பு வழங்கிய விழுதுகள் அமைப்பின் அங்கத்தவர்கள் மற்றும் பொதுமக்கள் அனைவருக்கும் அமைப்பின் சார்பாக நன்றிகளையும் வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்வதாகவும் தெரிவித்துள்ளது.

## குருநாகல் மாநகர சபை உறுப்பினரின் அதிசொகுசு வாகனத்தில் திடீர் தீப்பரவல்



(இக்பால் அலி)

குருநாகல், நாவின்ன சந்திக்கு அருகில் நேற்று முன்தினம் இரவு குருநாகல் மாநகர சபை உறுப்பினருடைய அதிசொகுசு ஜீப்வண்டி தீப்பரவலுக்குள்ளாகியுள்ளது.

தீப்பரவலுக்குள்ளானமையினால் அந்த வாகனத்தின் என்ஜினின் ஒரு பகுதி முற்றாக எரிந்து சேதமடைந்துள்ளது. அதனையடுத்து, பிரதேச மக்கள் மற்றும் குருநாகல் மாநகர சபையின் தீயணைப்பு படையினருடன் இணைந்து தீயினை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர்.

இந்த தீப்பரவல் சம்பவத்தினால் 30 இலட்சம் ரூபா சேதம் ஏற்பட்டுள்ளமை மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதாக குருநாகல் பொலிஸார் தெரிவித்தனர்.

## மேலதிக நேர கொடுப்பனவை வழங்கக்கோரி வெளிக்கள குடும்ப நல உத்தியோகத்தர்கள் மன்னாரில் போராட்டம்



(மன்னார் நகர் நிருபர்)

மன்னார் மாவட்ட வைத்தியசாலைகளில் கடமையாற்றும் வெளிக்கள குடும்ப நல உத்தியோகத்தர்கள் மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்கு முன்பாக நேற்று (7) இரண்டு மணி நேர கவனயீர்ப்பு போராட்டமொன்றை முன்னெடுத்தனர்.

காலை 9 மணி தொடக்கம் 11 மணி வரை இந்த போராட்டம் இடம்பெற்றது. நீண்ட காலமாக வழங்கப்படாமலுள்ள மேலதிக நேரக் கொடுப்பனவை வழங்கக் கோரியே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

குறிப்பாக தற்போதைய கொரோனா காலப்பகுதியில் தமது சாதாரண கடமை நேரத்தை விட தற்போது அதிக நேரம் கடமையாற்றுவதாகவும், குறிப்பாக அன்ரிஜன், பி.சி.ஆர் பரிசோதனைகள் மற்றும் தனிமைப்படுத்தப்பட்டவர்களை பராமரித்தல் உள்ளிட்ட மேலதிக கடமைகளை மேற்கொண்டாலும், இதுவரை தமக்கான மேலதிக நேர கொடுப்பனவை வழங்கவில்லை என கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்ட வெளிக்கள குடும்ப நல உத்தியோகத்தர்கள் தெரிவித்தனர். மேலும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு போராட்டத்தை மேற்கொண்டனர்.

தமது மேலதிக நேர கொடுப்பனவை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கோரிக்கை அடங்கிய மகஜர் ஒன்றை வடமாகாண ஆளுநருக்கு அனுப்பி வைக்கும் வகையில் மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரிடம் கையளித்தனர்.

இதன் போது மகஜரை பெற்றுக் கொண்ட மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ரி.வினோதன் கருத்து தெரிவிக்கையில்,

மேலதிக நேர கொடுப்பனவு தொடர்பாக உரிய அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளதோடு அனுமதிக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மேலும் குறித்த மகஜரை வட மாகாண ஆளுநருக்கு உடனடியாக வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்வதாகவும் அவர் தெரிவித்தார்.

## மட்டக்களப்பு விடுதியொன்றிலிருந்து ஆணொருவரின் சடலம் மீட்பு



(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு நல்லையா வீதியில் அமைந்துள்ள விடுதியொன்றிலிருந்து ஆணொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

செல்வரெட்ணம் செல்வ குளேந்திரன் எனும் 73 வயது மதிக்கத்தக்க ஒருவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார். நேற்று முன்தினம் இரவு உறக்கத்திற்கு சென்றிருந்த நிலையில், நேற்று காலை சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு தலைமையக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றத்தின் உத்தரவிற்கமைவாக சம்பவ இடத்திற்கு சென்ற திடீர் மரணவிசாரணை அதிகாரி சிதம்பரப்பிள்ளை ஜீவரெத்தினம், சடலத்தை பார்வையிட்ட பின்னர் மட்டு. போதனா வைத்தியசாலைக்கு கொண்டு சென்று பி.சி.ஆர் பரிசோதனைக்குட்படுத்தும்படி பொலிஸாரிடம் உத்தரவிட்டுள்ளார்.

குறித்த சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை மட்டக்களப்பு தலைமையக பொலிஸார் மேற்கொண்டுவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## காரைக்கால் சிவன் கோவிலை அண்மித்த பகுதியில் அதிகரிக்கும் நாகப் பாம்புகளால் மக்கள் அச்சம்

(ஐ.சிவசாந்தன்)

இணுவில் காரைக்கால் சிவன் கோவிலை அண்மித்த பகுதிகளில் வசிக்கும் மக்கள் நாகப் பாம்பு உள்ளிட்ட விஷத் தன்மை கொண்ட விலங்குகளால் அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் வாழ்ந்து வருவதாக நல்லூர் பிரதேச சபை உறுப்பினர் சி.கௌசல்யா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

சிலரின் வீடுகள் மற்றும் விவசாய காணிகளுக்குள் வரும் நாகப் பாம்பு உள்ளிட்ட விஷத் தன்மை கொண்ட விலங்குகளை உயிருடன் பிடித்து வந்து சிவன் கோவில்களை அண்டிய பகுதிகளில் விட்டுச் செல்கின்றனர்.

இந்து மக்கள் மத்தியில் நாக வழிபாட்டு முறை உள்ளமையால், நாகப் பாம்பை அடித்துக் கொல்வதற்கு பலரும் தயக்கம் காட்டுகின்றனர். அதனால் அதனை உயிருடன் பிடித்து வந்து ஆலய சூழலில் விட்டுச் செல்கின்றனர்.

புராதன ஆலயமான காரைக்கால் சிவன் கோவிலை சுற்றி பல பாம்பு புற்றுகள் உள்ளன. அந்த புற்றுகளுக்குள் தற்போது நாகப் பாம்பு உள்ளிட்ட பாம்புகள் குடி கொண்டுள்ளன.



இந்நிலையில் அவை தற்போது, ஆலயத்தை அண்மித்த பகுதிகளிலுள்ள வீடுகளுக்குள்ளும், விவசாய காணிகளுக்குள்ளும் படையெடுக்கின்றன. அதனால் அப்பகுதி மக்கள் பாம்புகளின் அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் வாழ்ந்து வருகின்றனர்.

இது தொடர்பில் நல்லூர் பிரதேச சபையின் கவனத்திற்கு கொண்டு சென்றதையடுத்து, அவர்கள் மூலம் வனவிலங்கு பாதுகாப்பு துறையின் உதவியை பெற்றுள்ளோம். அதன் மூலம் ஆலய சூழலில் நாகப் பாம்புகள் உள்ளிட்ட பாம்புகள், விஷத் தன்மை கொண்ட விலங்குகளை கண்ணுற்றால் சமூக பொறுப்புடன் 0779507269 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு தொடர்பு கொண்டு அறிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இதேவேளை, ஆலயத்தை அண்மித்த பகுதிகளில் பாம்புகள் உள்ளிட்ட விஷத் தன்மை கொண்ட விலங்குகளை கொண்டுவந்து உயிருடன் விடுவதனை தடை செய்வதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருவதாகவும் சுட்டிக்காட்டினார்.

## மட்டக்களப்பு மாவட்டத்தில் யானை தடுப்பு வேலிகள் அமைக்கும் வேலைத்திட்டம் ஆரம்பம்

(மட்டக்களப்பு மேலதிக நிருபர்)



மட்டக்களப்பு மாவட்டத்தில் இந்த வருடத்திற்குள் 107.5 கிலோமீட்டர் தூரத்திற்கு யானை தடுப்பு வேலிகள் அமைத்து யானைகள் கிராமங்களுக்குள் வருவதை தடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் க.கருணாகரன் தெரிவித்துள்ளார்.

இதன் முதற்கட்டமாக வனஜீவராசிகள் திணைக்களம் கிரான், வாகரை மற்றும் செங்கலடி பிரதேச செயலாளர் பிரிவுகளில் இந்த வேலிகள் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

மேலும் அவர் கருத்து தெரிவிக்கையில், கிரான் பிரதேசத்தில் 73 கிலோமீற்றர் தூர வேலியும், வாகரை பிரதேசத்தில் 18.5 கிலோமீற்றர் தூர வேலியும், செங்கலடி பிரதேசத்தில் 16 கிலோ மீற்றர் தூர வேலியும் அமைக்கப்படவுள்ளதாக தெரிவித்தார்.

மொத்தத்தில் 83 கிலோமீற்றர் தூர வேலைகளுக்கான கேள்வி கோரப்பட்டு உரிய ஒப்பந்தக்காரர்களிடம் வேலைகள் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும், இவ்வருட இறுதிக்குள் அதனை பூர்த்திசெய்ய நடவடிக்கை எடுப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.



ஹட்டனில் 30 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கான இரண்டாம் கட்ட தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை நேற்று முன்னெடுக்கப்பட்டது. இதன்போது ஹட்டன் டி.கே.டபிள்யூ கலாசார மண்டபத்தில் 2ஆயிரம் பேருக்கும் ஹட்டன் ஹைலன்ஸ் கல்லூரியில் 2ஆயிரத்து 900 பேருக்கும் தடுப்பூசி ஏற்றப்பட்டது. மக்கள் தடுப்பூசிகளை பெற்றுக்கொள்ள ஆர்வமாக வந்திருந்ததை படங்களில் காணலாம்.

(படங்கள்: எம்.கிருஸ்ணா, க.கிஷாந்தன்)

# கந்தளாயில் 45 ஆயிரம் தொன் நெல் மூடைகளை பதுக்கிய மூன்று களஞ்சியசாலைகளுக்கு சீல்





(கந்தளாய் நிருபர்)

திருகோணமலை கந்தளாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் 45 ஆயிரம் தொன் நெல் மூடைகளை பதுக்கி வைத்திருந்த மூன்று களஞ்சியசாலைகளுக்கு சீல் வைக்கப்பட்டுள்ளது.

நுகர்வோர் அதிகார சபையின் அதிகாரிகளால் நேற்று (07) கந்தளாய் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கைகளின்போது மூன்று நெல் களஞ்சியசாலைகளில் 45 ஆயிரம் தொன் நெல்மூடைகள் பதுக்கி வைக்கப்பட்டிருந்த நிலையில் அவ்மூன்று நெல் களஞ்சியசாலைகளுக்கும் சீல் வைக்கப்பட்டுள்ளதாக நுகர்வோர் அதிகார சபையின் திருகோணமலை பணிப்பாளர் கே.டி வசந்தன் தெரிவித்தார்.

சுற்றிவளைப்பு நடவடிக்கைகளில் பொலிஸாரும் ஈடுபட்டதோடு, பதுக்கிவைத்திருந்தோருக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளவுள்ளதாகவும் திருகோணமலை மாவட்ட நுகர்வோர் அதிகார சபையின் பணிப்பாளர் கே.டி வசந்தன் தெரிவித்தார்.

# மட்டக்களப்பில் ஒரே நாளில் 206 பேருக்கு கொரோனா மாவட்டத்தில் இதுவரை 248 பேர் உயிரிழப்பு

## சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் மயூரன்

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் 24 மணி நேரத்தில் 2 பேர் உயிரிழந்ததுடன், 206 பேருக்கு கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது. இந்நிலையில் மாவட்டத்தில் இதுவரை உயிரிழந்தோரின் மொத்த எண்ணிக்கை 248 ஆக அதிகரித்துள்ளதாகவும் மட்டு. சுகாதார பிரிவிலேயே அதிகமான (55) மரணங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் நா.மயூரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் நேற்று (07) இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் ஒருவரும், வவுணதீவு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் ஒருவர் உட்பட இருவர் நேற்று முன்தினம் மாலையுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் உயிரிழந்ததையடுத்து, மாவட்டத்தில் 248 ஆக உயிரிழப்பு அதிகரித்துள்ளது.

அதேவேளை களுவாஞ்சிக்குடி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 50 பேருக்கும், மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 73 பேருக்கும், செங்கலடி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 30 பேர் உட்பட 206 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதுடன், மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் அதிகூடியதாக 55 பேரும், காத்தான்குடி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 35 பேரும் இதுவரை மரணமடைந்துள்ளனர்.

கடந்த மாதத்தில் 7ஆயிரத்து 959 கொரோனா



தொற்று உறுதிசெய்யப்பட்டதுடன், கடந்த வாரத்தில் ஆயிரத்து 414 பேருக்கு தொற்று கண்டறியப்பட்டது. நாளாந்தம் 200 க்கு மேற்பட்ட நோயாளர்களும் 5 க்கு மேற்பட்ட உயிரிழப்பும் பதிவுசெய்யப்படுவதுடன், தொடர்ந்து 2ஆயிரத்து13 பேர் சிகிச்சை பெற்றுவருகின்றனர். இவர்களில் ஆயிரத்து 600 பேர் வீடுகளில் வைத்து பராமரிக்கப்படுகின்றனர்.

மாவட்டத்தில் முதல் தடுப்பூசி 30 வயதுக்கு மேற்பட்ட 95 வீதமான 2 இலட்சத்து 70 ஆயிரம் பேருக்கு ஏற்றப்பட்டதுடன், இரண்டாவது தடுப்பூசி 74 வீதமான 2 இலட்சத்து 19 ஆயிரம் பேருக்கு ஏற்றப்பட்டுள்ளது.

எனவே மக்கள் முதலில் தடுப்பூசியை ஏற்றிக்கொள்ளுங்கள். சுகாதார நடைமுறைகளை பின்பற்றி சமூக பொறுப்புடன் நடந்துகொண்டால் மாத்திரமே இந்த கொவிட் தொற்றை கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரமுடியும் என்றார்.

# ஐஸ் போதைப்பொருளுடன் மட்டக்களப்பில் ஒருவர் கைது

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு நகர் பகுதியிலுள்ள லொயிஸ் அவனியூ வீதியில் உள்ள வீடொன்றில் 2 கிராம் ஐஸ் போதைப்பொருளுடன் நபரொருவரை விசேட அதிரடிப்படையினர் நேற்று முன்தினம் (06) கைதுசெய்து ஒப்படைத்துள்ளதாக மட்டு. தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

விசேட அதிரடிப்படையினருக்கு கிடைத்த தகவல் ஒன்றுக்கமைய குறித்த வீதியிலுள்ள வீட்டை விசேட அதிரடிப்படையினர் முற்றுகையிட்டபோது சந்தேக நபர் ஒரு சிறிய பெட்டி ஒன்றில் பொதிசெய்யப்பட்டு விற்பனைக்காக வைத்திருந்த 2 கிராம் ஐஸ் போதைப்பொருளை மீட்டதுடன், அவரை கைதுசெய்தனர்.

இந்த நிலையில் பிரதான போதைப்பொருள் வியாபாரியான இவர், தனியார் பஸ் வண்டியில் நடத்துனராக கடமையாற்றி வருகின்றார். இந்நிலையில் போதைப்பொருளை விற்பதற்காக பொதிசெய்து ஆயத்தமாக இருந்தபோது விசேட அதிரடிப்படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், இவரை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.



இதேவேளை இதில் கைதுசெய்யப்பட்டவரின் வீட்டை கடந்த சில மாதங்களுக்கு முன்னர் வாழைச்சேனை கடதாசி ஆலை இராணுவ புலனாய்வுப் பிரிவினர் களுவாஞ்சிக்குடி விசேட அதிரடிப்படையினருடன் முற்றுகையிட்ட போது பிரதான வியாபாரியான இவரும் இவரது தாயாரும் தப்பியோடியுள்ள நிலையில், அங்கு 15 கிராம் ஐஸ் போதைப்பொருள் மற்றும் பொதிசெய்யும் உபகரணங்களுடன் ஒருவரை கைதுசெய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# 30 லீற்றர் கசிப்பு - கஞ்சாவுடன் வாழைச்சேனையில் இருவர் கைது

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலை பிரதேசத்தில் வீடொன்றிலிருந்து 30 லீற்றர் கசிப்புடன், பெண்ணொருவரை நேற்று முன்தினம் (06) கைதுசெய்துள்ளதாக மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொறுப்பதிகாரி பி.கே.பண்டார தெரிவித்தார்.

மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவுக்கு கிடைத்த தகவல் ஒன்றுக்கமைய கொக்கட்டிச்சோலை பொலிஸார் குறித்த பகுதியில் உள்ள வீடொன்றை நேற்று முன்தினம் முற்றுகையிட்டனர். இதன்போது மறைத்து வைக்கப்பட்டிருந்த 30 லீற்றர் கசிப்பை மீட்டதுடன், பெண்ணொருவரையும் கைதுசெய்தனர்.

அதேவேளை வாழைச்சேனை பிறைந்துறைச்சேனையில் நேற்று முன்தினம் பெண் ஒருவரை கஞ்சாவுடன் பொலிஸார் கைதுசெய்தனர்.

இவ்வாறு இரு வெவ்வேறு சம்பவங்களில் கைதுசெய்யப்பட்டவர்களை அந்தந்த பொலிஸ் நிலைய பொலிஸாரால் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

# மட்டு. கோட்டமுனையில் 62 பேருக்கு மேற்கொண்ட அன்ரிஜன் பரிசோதனையில் 21 பேருக்கு கொரோனா




(க.சரவணன்)


மட்டக்களப்பு கோட்டமுனை பொது சுகாதாரப் பிரிவில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த 62 பேருக்கு நேற்று முன்தினம் (06) பொது சந்தை சதுக்கத்தில் வைத்து மேற்கொள்ளப்பட்ட அன்ரிஜன் பரிசோதனையில் 21 பேருக்கு கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளதாக கோட்டமுனை பொது சுகாதார பரிசோதகர் மிதுன்ராஜ் தெரிவித்தார்.

குறித்த பகுதியில் ஏற்கனவே அடையாளம் காணப்பட்ட கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்டவர்களுடன் நெருங்கிப் பழகியவர்கள், உறவினர்கள் அவர்களது வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்டனர்.



இவ்வாறு தனிமைப்படுத்தப்பட்டவர்களை மட்டக்களப்பு பொதுச் சந்தை கட்டடப் பகுதியில் அழைத்துவரப்பட்ட 62 பேருக்கு அன்ரிஜன் பரிசோதனை மேற்கொண்டதில், 21 பேருக்கு கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளதையடுத்து அவர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

# வெருகலம்பதி ஸ்ரீ சித்திரவேலாயுத சுவாமி ஆலய வருடாந்த மகோற்சவம் இவ்வருடம் இடைநிறுத்தம்



(திருகோணமலை நிருபர்)

வரலாற்று சிறப்புமிக்கதும் கிழக்கிலங்கையின் தொன்மைமிகு கோவிலுமாக விளங்கும் ‘சின்னக் கதிர்காமம்’ என்றழைக்கப்படும் திருகோணமலை வெருகலம்பதி ஸ்ரீ சித்திர வேலாயுத சுவாமி தேவஸ்தானத்தின் வருடாந்த மகோற்சவம் இவ்வருடம் நடைபெறமாட்டாதென ஆலய நிர்வாகம் அறிவித்துள்ளது.

வெருகலம்பதி ஸ்ரீ சித்திர வேலாயுத சுவாமி ஆலய வருடாந்த மகோற்சவம் இன்று (08.09.2021) இடம்பெறவிருந்த நிலையில், கொரோனா தொற்று நிலைமை காரணமாக இவ்வருடம் நடைபெறமாட்டாதென ஆலய நிர்வாகம் பொதுமக்களுக்கு அறிவித்துள்ளது.

வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த தேவஸ்தானத்தின் வருடாந்த மகோற்சவத்தில் நாட்டின் பல பாகங்களிலிருந்து பல்லாயிரக்கணக்கான பக்த அடியார்கள் ஒவ்வொரு வருடமும் வருகை தருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# பொத்துவில் வீதியில் முச்சக்கரவண்டி விபத்து

## காயங்களுடன் ஒருவர் வைத்தியசாலையில்



(மாளிகைக்காடு நிருபர்)

அக்கரைப்பற்று - பொத்துவில் பிரதான வீதியில் சங்கமன்கண்டியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற முச்சக்கரவண்டி விபத்தில் ஒருவர் படுகாயமுற்று வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அக்கரைப்பற்று - பொத்துவில் வீதியில் பயணித்துக் கொண்டிருந்த முச்சக்கரவண்டி வேகக்கட்டுப்பாட்டை இழந்தமையினாலேயே இவ்விபத்து ஏற்பட்டுள்ளதாக சந்தேகிக்கப்படுகின்றது.

விபத்திற்குள்ளான முச்சக்கரவண்டியின் சாரதி பலத்த காயங்களுடன், பொத்துவில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குறித்த முச்சக்கரவண்டியில் வாழைப்பழம் ஏற்றிவந்த நிலையிலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. பொத்துவில் பொலிஸார் இது பற்றிய மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# மட்டு. திகிலிவெட்டை வாவி ஊடாக தோணியில் கசிப்பு எடுத்துவந்தவர் கைது - ஒருவர் தப்பியோட்டம்




(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு ஏறாவூர் பொலிஸ் பிரிவிலுள்ள திகிலிவெட்டை பிரதேசத்தில் இருந்து வாவி ஊடாக தோணியில் மொறக்கொட்டாஞ்சேனை பிரதேசத்துக்கு வியாபாரத்துக்காக கொண்டுவரப்பட்ட கசிப்புடன் ஒருவரை நேற்று (07) அதிகாலை கைதுசெய்துள்ளதுடன், ஒருவர் தப்பியோடியுள்ளதாக மாவட்ட குற்ற விசாரணைப்பிரிவு பொறுப்பதிகாரி பி.கே.பண்டார தெரிவித்தார்.

மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவுக்கு கிடைத்த தகவலையடுத்து மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சுகத் மாசிங்காவின் ஆலோசனைக்கமைய மாவட்ட குற்ற விசாரணைப்பிரிவு பொறுப்பதிகாரி பி.கே.பண்டார தலைமையிலான பொலிஸார் நேற்று அதிகாலை 3.30 மணிக்கு மொறக்கொட்டாஞ்சேனை வாவி பகுதியில் கண்காணிப்பில் ஈடுபட்டிருந்தனர்.

இதன்போது வாவியில் தோணியில் இருவர் கசிப்புகளை கலன்களில் எடுத்துக்கொண்டு வந்து கரையொதுங்கியபோது அவர்களை பொலிஸார் மடக்கிப்பிடித்தனர். இதன்போது ஒருவர் தப்பியோடியுள்ளதாகவும் ஒருவரை 80 லீற்றர் கசிப்புடன் கைதுசெய்துள்ளதுடன் இரண்டு தோணிகளையும் மீட்டுள்ளனர்.

இதில் கைதுசெய்யப்பட்டவர் மற்றும் கசிப்பு, தோணிகளை ஏறாவூர் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளதாகவும் இவரை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், தப்பியோடியவரை கைதுசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

# கந்தளாயில் ஐம்பதாயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் பயறு செய்கை



(கந்தளாய் நிருபர்)

திருகோணமலை கந்தளாயில் ஐம்பதாயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் பயறு செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கந்தளாய் நீர்ப்பாசன பொறியியலாளர் பிரிவுக்குட்பட்ட பேராறு, அணைக்கட்டு, மற்றும் நான்காம் கொலனி போன்ற பகுதிகளில் பயறு செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஐம்பதாயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் செய்கை பண்ணப்பட்டுள்ளதோடு, ஒக்டோபர் மாதமளவில் அறுவடை மேற்கொள்ளப்படும் எனவும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

பெரும்போக நெல் அறுவடை முடிந்த கையோடு பயறு செய்கை மேற்கொள்ளப்படுவதாகவும் கூடுதலான நீரோ அல்லது கிருமி நாசினிகளோ தேவையில்லையெனவும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

கடந்த முறையை விட இம்முறை இருபதாயிரம் ஏக்கர் மேலதிகமாக பயறு செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

# இன்று பொறுப்பேற்கிறது தலிபான்களின் புதிய அரசு

### பதவியேற்பு நிகழ்வுக்கு பாக். - ரஷ்யா - சீனாவுக்கு அழைப்பு



ஆப்கானிஸ்தானில் தலிபான்களின் புதிய அரசு இன்று அமையலாம் என தகவல் வெளியாகியுள்ளது.

தலிபான் தலைமையிலான புதிய அரசு பொறுப்பேற்கும் நிகழ்வில் பங்கேற்க பாகிஸ்தான், சீனா, ரஷ்யா, துருக்கி, கட்டார் மற்றும் ஈரான் உள்ளிட்ட நாடுகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

தெற்காசிய நாடான ஆப்கானிஸ்தானிலிருந்து அமெரிக்க தலைமையிலான படைகள் வாபஸ் பெறப்பட்டதையடுத்து தலிபான் தீவிரவாத அமைப்பினர் அந்நாட்டின் ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றினர்.

இதையடுத்து அங்கு, 20 ஆண்டுகளாக நடந்து வந்த உள்நாட்டு போர் முடிவுக்கு வந்தது. சர்வதேச சமூகம் ஏற்றுக் கொள்ளும் வகையிலான அரசு அமைக்கப்படும் என தலிபான்கள் உறுதியளித்துள்ளனர்.

தலிபான்கள் தலைமையிலான புதிய அரசு விரைவில் பதவியேற்கவுள்ளது. இந்த நிகழ்ச்சியில் பங்கேற்க பாகிஸ்தான், துருக்கி, கட்டார், ரஷ்யா, சீனா, ஈரான் ஆகிய நாடுகளுக்கு தலிபான்கள் அழைப்பு விடுத்துள்ளனர். இந்த தகவல் தலிபான்களின் அதிகாரபூர்வ சமூக வலைதளத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து தலிபான்களின் செய்தி தொடர்பாளர் ஸபிஹுல்லாஹ் முஜாஹித் கூறுகையில்,

''நம் நாட்டின் மீது படையெடுத்து வந்தவர்கள் நம் நாட்டை மறுகட்டமைப்பு செய்ய மாட்டார்கள். மக்கள் தான் ஒன்றிணைந்து அதை செய்து முடிக்க வேண்டும்'' - என்றார்.

ஆப்கானில் அமையவுள்ள புதிய அரசில் முல்லா முகம்மது அசன் அகுந்த் அரசின் தலைவராக இருப்பார் எனவும், முல்லா பராதரும், முல்லா அப்துஸ் ஸலாமும் துணைத் தலைவர்களாக இருப்பார்கள் எனவும் காபூல் உள்ளூர் ஊடகங்களில் செய்தி வெளியாகியுள்ளது.

நாட்டின் தலைவராக பொறுப்பேற்பார் என கூறப்படும் முல்லா முகம்மது அசன் அகுந்த், தலிபான்களின் முடிவெடுக்கும் அதிகாரமிக்க அமைப்பான ரெபாரி ஷூராவின் தலைவராக கடந்த 20 வருடங்களாக இருந்து வருகிறார்.

கடந்த முறை 1996இல் தலிபான்கள் ஆட்சியில் இருந்த போது, துணை பிரதமர், வெளியுறவு அமைச்சர் உள்ளிட்ட பல பதவிகளை வகித்துள்ளார்.

புதிய அரசில் ஹக்கானிகளின் தலைவரான சிராஜுதீன் ஹக்கானி உள்துறை அமைச்சராகவும், தலிபான் நிறுவனரான முல்லா ஒமரின் மகன் முல்லா யாக்கூப் இராணுவ அமைச்சராகவும் நியமிக்கப்படுவார்கள் என கூறப்படுகிறது.

**உள்நாட்டு விவகாரத்தில் பாக். தலையீடு**

ஆப்கானிஸ்தான் உள்நாட்டு விவகாரங்களில் பாகிஸ்தான் வெளிப்படையாக ஈடுபடுவதற்கு ஈரான் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில் ''ஆப்கானின் உள்நாட்டு விவகாரத்தில் பாகிஸ்தான் உட்பட எந்த நாட்டின் தலையீட்டையும் அனுமதிக்க மாட்டோம். இரு நாட்டுக்கும் இடையே நட்புறவை ஏற்படுத்துவதற்காக பாகிஸ்தான் சார்பில் பயஸ் ஹமீது வந்தார். எங்கள் மூத்த தலைவர்களை சந்தித்து பேசினார்.

இரு நாட்டு எல்லையில் பயணியரை அனுமதிப்பது குறித்தும், வர்த்தகத்தை தொடர்வது குறித்தும் பேச விரும்புவதாக பாகிஸ்தான் தெரிவித்தது. அதன்படி, பாகிஸ்தான் குழு வருவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. பயங்கரவாத நடவடிக்கைகள் நடப்பதற்கு எங்களுடைய நிலத்தை பயன்படுத்த எவரையும் அனுமதிக்க மாட்டோம் என்ற உறுதியையும் அளித்துள்ளோம்'' - இவ்வாறு தலிபான் செய்தித் தொடர்பாளர் ஷபிஹுல்லாஹ் முஜாஹித் தெரிவித்துள்ளார்.

**பஞ்ச்ஷீரில் பறக்கும் தலிபான் கொடி**

போராளி குழுக்களின் கட்டுப்பாட்டிலிருந்த பஞ்ச்ஷீர் மாகாணத்தின் ஆளுநர் மாளிகையில் தலிபான்கள் கொடி ஏற்றும் வீடியோ வெளியாகியுள்ளது.

தேசிய கிளர்ச்சி படையினரின் வசமிருந்த பஞ்ச்ஷீர் மாகாணத்தை கடும் போராட்டத்திற்கு பிறகு தலிபான்கள் கைப்பற்றியுள்ளனர். இதன் மூலம் ஆப்கானிஸ்தான் முழுவதும் தலிபான்கள் கட்டுப்பாட்டில் வந்துள்ளது.

இதேவேளை, போராளிக் குழுக்களின் தலைவர் அகமது மசூத் தான் பாதுகாப்பாக உள்ளதாக ட்விட்டரில் தெரிவித்துள்ளார்.

**ஐ.எஸ். அமைப்பை எதிர்த்துப் போராடுவோம்**

ஆப்கானில் புதிய அரசு பொறுப்பேற்கவுள்ள நிலையில், மாநில ஆளுநர்களை தலிபான் தலைமை நியமித்து வருகிறது. ஆப்கானிஸ்தானின் கந்தஹார் மாகாணத்தில் முல்லா கெடா முஹம்மது ஆளுநராக பதவியேற்றுள்ளார். இந்த மாகாணத்தில் ஐ.எஸ். பயங்கரவாத அமைப்பு தீவிரமாக செயற்பட்டு வருகிறது.

உலகத்தையே அச்சுறுத்திவரும் தீவிரவாத அமைப்பான ஐ.எஸ். சமீபத்தில் ஆப்கானிஸ்தானிலுள்ள பள்ளிவாசல்கள், பொது இடங்கள், வைத்தியசாலைகள் ஆகியவற்றில் வெடிகுண்டு தாக்குதல் நடத்தியது குறிப்பிடத்தக்கது.

இதுகுறித்து கருத்து தெரிவித்த முஹம்மது, சிரியா மற்றும் ஈராக் ஆகிய நாடுகளில் ஐ.எஸ். மேற்கொண்ட தாக்குதலை ஒப்பிடுகையில் ஆப்கானிஸ்தானில் ஐ.எஸ். பெரும் அச்சுறுத்தலாக இல்லை என்று தெரிவித்துள்ளார். மேலும் தலிபான்கள் ஆட்சியை பிடித்துள்ளதால் ஐ.எஸ். அமைப்பால் ஆப்கானிஸ்தானுக்கு பெரும் பாதிப்பு எதுவும் ஏற்படாது என்று அவர் உறுதிபடத் தெரிவித்துள்ளார்.

**திரையிட்டு மறைக்கப்படும் வகுப்பறைகள்**

ஆப்கானில் உள்ள கல்லூரியில் மாணவ மாணவிகளுக்கு நடுவே திரை அமைத்து வகுப்புகள் நடத்துவது போல் புகைப்படங்கள் வெளியாகியுள்ளன.

காபூலிலுள்ள அவிசென்னா பல்கலைக்கழக வகுப்புகளில் மாணவர்கள் மற்றும் மாணவிகள் நடுவே திரை அமைத்து தனித்தனியாக பிரித்து பாடம் நடத்தப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக மாணவர்களுக்கு தனி வகுப்புகள் மாணவிகளுக்கு தனி வகுப்புகள் என தலிபான்கள் அறிவித்திருந்த நிலையில்



ஆசிரியர்கள் பற்றாக்குறை உள்ளிட்ட பிரச்சினைகள் காரணமாக இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

**கடுமையான உடை கட்டுப்பாடு**

ஆப்கானிஸ்தானில் புதிய கல்வியாண்டுக்காக கல்வி நிறுவனங்கள் திறக்கப்பட்டுள்ள நிலையில், தலைநகர் காபூலில் மாணவர்கள் வருகையின்றி கல்வி மையங்கள் வெறிச்சோடி காணப்பட்டதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

1996 ஆம் ஆண்டு முதல் 2001ஆம் ஆண்டு வரை நடந்த தலிபான் ஆட்சியில் இருந்ததை போன்ற கடுமையான கட்டுப்பாடுகள் இந்த முறை இருக்காது என்று தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில், மாணவிகளும் தனியார் கல்வி மையங்களுக்கு சென்று கல்வி கற்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இருப்பினும் மாணவிகளுக்கு கடுமையான உடை கட்டுப்பாடுகளை தலிபான்கள் விதித்துள்ளனர்.

## உலக செய்திகள்

# பூமிக்கு அருகே வந்த 1000ஆவது குறுங்கோள்



பூமிக்கு அருகே வரும் ஆயிரமாவது குறுங்கோளை நாசா கண்டுபிடித்துள்ளது.

2021 PJ1 எனப் பெயரிடப்பட்டுள்ள இந்த குறுங்கோள் பூமியில் இருந்து சுமார் 17 இலட்சம் கிலோமீற்றர் தொலைவில், கடந்து சென்றதாக நாசா தெரிவித்துள்ளது.

இந்த குறுங்கோள் மிகவும் சிறியது என்பதால் ரேடார்களில் அது பதிவாகவில்லை. எனவே அதன் படமும் கிடைக்கவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. சமீபத்தில் 1.4 கிலோ மீற்றர் அகலமுள்ள குறுங்கோளை நாசா கண்டுபிடித்தது.

அது மணிக்கு சுமார் 94 ஆயிரம் கிலோமீற்றர் வேகத்தில் பூமியை கடந்து சென்றது. நாசா கண்டுபிடித்த சில குறுங்கோள்கள், 66 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர் பூமியில் டைனோசர்களை அழித்தது போன்று பூமிக்கு பெரும் ஆபத்தை விளைவிக்கும் அளவிலானவை என்பது குறிப்பிடத்தக்கது.

# சூறையாடும் இடா புயல்: நியூயோர்க்கில் 60 பேர் பலி

நியூயோர்க்கில் இடா புயலால் ஏற்பட்டுள்ள மழை மற்றும் வெள்ளத்தில் சிக்கி 60 பேருக்கு மேல் உயிரிழந்துள்ளனர்.

அமெரிக்கா வட கிழக்கு மாகாணங்களில் இடா புயல் காரணமாக கடும்மழை பெய்துவருகிறது. இதையடுத்து ஏற்பட்ட வெள்ளம் காரணமாக பல்வேறு மாகாணங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. 6,00,000 வீடுகளுக்கு மேல் மின்சாரம் தடை செய்யப்பட்டிருக்கும் நிலையில் புயலால் கடுமையான சேதங்கள் ஏற்பட்டுள்ளன.

இந்நிலையில், இதுவரை புயலில் சிக்கி 60 பேர் உயிரிழந்ததாக நியூயோர்க் காவல்துறை தெரிவித்துள்ளது. முன்னதாக, முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக விமான நிலையங்கள் மூடப்பட்டு நியூயோர்க் மற்றும் நியூ ஜெர்சியில் அவசர நிலை பிரகடனப்படுத்தப்பட்டது.

தெற்கு மாகாணமான லூசியானாவில் இடா புயல் மற்றும் சூறாவளி காரணமாக தீவிரமான வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு மாகாணத்தின் வடக்கு பகுதிகள் பெரும் பாதிப்படைந்தன.

# ஆப்கானிஸ்தானை தொடர்ந்து காஷ்மீரை குறிவைக்கும் தீவிரவாதிகள்

### இந்திய உளவு அமைப்புகள் எச்சரிக்கை



ஆப்கானிஸ்தானை தொடர்ந்து, தலிபான்கள் உதவியுடன் காஷ்மீரைக் கைப்பற்ற தீவிரவாத இயக்கங்கள் முயற்சித்து வருவதாக இந்திய உளவு அமைப்புகள் தெரிவித்துள்ளன.

ஆப்கானிஸ்தானை தலிபான்கள் கைப்பற்றுவதற்கு இரு மாதங்களுக்கு முன்பே லஷ்கர் இ தொய்பா, ஜெய்ஷ் இ முகமது மற்றும் அல்-பத்ர் உள்ளிட்ட பயங்கரவாத இயக்கங்களை பாகிஸ்தானின் உளவு அமைப்பான ஐ.எஸ்.ஐ. கூடுதல் கவனத்துடன் வளர்த்து வருவது தெரியவந்துள்ளதாக இந்திய உளவுத்துறை அதிகாரி ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

தற்போது காஷ்மீர் எல்லைப் பகுதியில் 200 உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தீவிரவாதிகள் காத்திருப்பதாகக் கூறிய அவர், ஐ.எஸ்.ஐயின் உத்தரவுக்கு தீவிரவாதிகள் காத்திருப்பதாகவும் தெரிவித்தார்.

ஆப்கானிஸ்தானில் அமெரிக்கப் படைகள் விட்டுச் சென்ற நவீன ஆயுதங்களை தீவிரவாத இயக்கங்களுக்கு பாகிஸ்தான் வழங்கியிருக்கலாம் என்ற அச்சம் நிலவுவதாகவும் அந்த அதிகாரி குறிப்பிட்டார். காஷ்மீரின் எல்லையோர பகுதிகளான பந்திப்பூர், குப்வாரா மற்றும் பாராமுல்லா உள்ளிட்ட பகுதிகளில் தீவிரவாதிகள் அதிக தாக்குதல் நடத்த வாய்ப்புள்ளதாகவும், இதற்காக தீவிரவாதிகளுக்கு உதவி செய்யக்கூடும் என கருதப்படும் 500 பேரை பிடித்து விசாரித்து வருவதாகவும் அந்த அதிகாரி மேலும் குறிப்பிட்டார். எனவே இந்திய பாதுகாப்புப் படைகள் பாகிஸ்தான் எல்லைப் பகுதியில் கூடுதல் கவனத்துடன் இருக்க அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்ட உளவுத்துறை அதிகாரி தெரிவித்துள்ளார்.

# பயனாளர்களுக்கு இன்ப அதிர்ச்சி கொடுக்கப்போகும் வட்ஸ்அப்




வட்ஸ்அப் பயனாளர்கள் தாங்கள் எப்போது ஒன்லைனில் இருந்தோம் என்பதை ஒரு சிலருக்கு மட்டும் மறைக்கும் புதிய வசதி அறிமுகம் செய்யப்படவிருக்கிறது.

பயனாளர்களின் புரொஃபைல் புகைப்படம், ஒன்லைனில் கடைசியாக வந்தது எப்போது என்பது உள்ளிட்ட தகவல்களை பயனாளர்கள், தாங்கள் விரும்பாதவர்களுக்கு மட்டும் காண்பிக்காத வகையில் அமைத்துக் கொள்ளும் வசதியை வட்ஸ்அப் உருவாக்கிவருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

தற்போது, கடைசியாக ஒன்லைனில் வந்தது, புரொபைல் புகைப்படம், தங்களைப் பற்றிய விவரங்கள் அனைத்தையும் அனைவரும் பார்க்கலாம் அல்லது தொலைபேசியில் எண் உள்ளவர்கள் மட்டும் அல்லது யாரும் பார்க்க முடியாத வகையில் அமைத்துக் கொள்ளலாம். ஆனால், குறிப்பிட்ட சிலர் மட்டும் பார்க்க முடியாத அல்லது பார்க்க முடியும் வகையில் அமைக்கும் வசதி இல்லை. இதனால், ஒரு சில சிக்கல்களை பயனாளர்கள் சந்தித்து வருகிறார்கள்.

ஆனால், இந்த தொல்லை விரைவில் தீரப்போகிறது. விரைவில் பயனாளர்களின் புரொபைல் புகைப்படம் உள்ளிட்ட தகவல்களை ஒரு சிலர் பார்க்க இயலாத வகையில் அமைக்கும் வசதியை வட்ஸ்அப் பரீட்சார்த்த முறையில் பரிசோதித்து வருகிறது.

இந்த வசதி மூலம், வட்ஸ்அப் பயனாளர்கள், தாங்கள் எப்போது ஒன்லைனில் இருந்தோம் உள்ளிட்ட தகவல்களை, ஒரு சிலர் பார்க்க இயலாத வகையில் மாற்றியமைத்துக் கொள்ளமுடியும்.



# சந்திரனை 9,000 முறை சுற்றி வந்த 'சந்திரயான்-2'

'சந்திரயான்-2' விண்கலம் நிலவை 9 ஆயிரம் முறை சுற்றி வந்துள்ளதாக இஸ்ரோ தெரிவித்துள்ளது.

நிலவு தொடர்பான இரண்டு நாள் கருத்தரங்கில் பேசிய இஸ்ரோ தலைவர் சிவன், சந்திரயான்-2 அனுப்பப்பட்டு 2 ஆண்டுகள் ஆனாலும் நிலவின் மேற்பரப்பில் சுமார் 100 கிலோ மீற்றர் உயரத்தில் ஆய்வு நடத்தி வருகிறது. அதன் செயற்பாடுகள் தங்களுக்கு ஊக்கமளிப்பதாகக் கூறிய அவர், சந்திரனில் தரையிறங்க சந்திரயான்-3 விண்கலம் தயாராகி வருவதாகவும் தெரிவித்தார்.

கடந்த 2019ஆம் ஆண்டு அனுப்பப்பட்ட சந்திரயான்- 2 விண்கலத்தின் லேண்டர் மற்றும் ரோவர் நிலவில் விழுந்து நொறுங்கியமை குறிப்பிடத்தக்கது.



தமிழகத்தில் ஒரத்தநாடு அருகே சில்லத்தூர் கிராமத்தில் கொதிக்கும் மஞ்சள் நீரை உடல் மீது ஊற்றிக் கொண்டு அருள்வாக்கு கூறினார் இளம்பெண்...

# அழிவின் விளிம்பில் 28வீதமான உயிரினங்கள்



உலகம் முழுவதும் அடையாளம் காணப்பட்ட 1,38,374 உயிரினங்களில் 28வீதமான உயிரினங்கள் அழிந்துபோகும் ஆபத்திலுள்ளதாக IUCN எனப்படும் சர்வதேச இயற்கைப் பாதுகாப்பு ஒன்றியம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பான ஆய்வறிக்கையில், பல்வேறு கடல் பிராந்தியங்களில் டூனா எனப்படும் சூரை மீன்களின் எண்ணிக்கை கடுமையாகக் குறைந்து வருவதாக கூறப்பட்டுள்ளது. சுறா மீன்களின் எண்ணிக்கை 37வீதமாக குறைந்துள்ளதாகவும், கொமேடோ டிராகன்களும் பெருமளவு அழிவைச் சந்தித்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காலநிலை மாற்றம், வாழ்விடம் சுருங்குதல், போதிய உணவின்மையே உயிரினங்கள் அழிவுக்கு காரணம் என IUCN அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# உதைபந்து உலகில் புதிய சாதனை படைத்த இத்தாலி

2022 கட்டார் பீபா உதைபந்து உலகக்கிண்ணத் தொடருக்கு அணிகளை தெரிவு செய்யும் தகுதிகாண் சுற்று போட்டிகள் தற்போது நடைபெற்றுவரும் நிலையில், இத்தாலி உதைபந்து அணி புதிய உலக சாதனை ஒன்றை நிலைநாட்டியது.

சுவிட்ஸர்லாந்து அணியுடன் நேற்று முன்தினம் நடைபெற்ற தகுதிகாண் போட்டியில் இத்தாலி அணி 0-0 என போட்டியை சமநிலையில் முடித்ததன் மூலம் உதைபந்து உலகில் புதிய உலக சாதனையுடன் 36ஆவது போட்டியில் தோல்வியை தவிர்த்துள்ளது.

இதற்கு முன்னர் ஒரு தேசிய உதைபந்து அணி தொடர்ச்சியாக தோல்வி எதனையும் தழுவாத சந்தர்ப்பமாக 35 போட்டிகள் காணப்பட்டன. பிரேசில் மற்றும் ஸ்பெயின் ஆகிய அணிகள் இருவேறு சந்தர்ப்பங்களில் இந்த சாதனையை நிலைநாட்டின.

இந்நிலையில் இத்தாலி தேசிய உதைபந்து அணி 36ஆவது போட்டியில் தோல்வியைத் தவிர்த்து புதிய உலக சாதனையை படைத்துள்ளது. கடந்த முறை இடம்பெற்ற பீபா உலகக் கிண்ணப் போட்டிகளுக்கு தகுதி பெறாத இத்தாலி, அதன் பின்னர் நடைபெற்ற அத்தனை ஆட்டங்களிலும் அதிகளவான மாற்றங்களோடு அசுர வளர்ச்சி பெற்று அசத்தி வருகின்றமை சுட்டிக்காட்டத்தக்கது.

மேலும் அண்மையில் நிறைவுக்கு வந்த யூரோ கிண்ண உதைபந்து தொடரின் மகுடம் சூடிக்கொண்ட இத்தாலி, தற்போது 36 ஆட்டங்களாக தோல்விகள் எதனையும் சந்திக்காது சாதனையும் படைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# த்ரில் வெற்றியுடன் 50 வருட கனவை நிறைவேற்றிய இந்திய அணி




இங்கிலாந்து அணியுடனான நான்காவது டெஸ்ட் போட்டியில் இந்திய அணி 157 ஓட்டங்கள் வித்தியாசத்தில் த்ரில் வெற்றிபெற்று தொடரில் 2-1 என்ற அடிப்படையில் முன்னிலை பெற்றுள்ளதுடன், லண்டன் த ஓவல் மைதானத்தில் 50 வருடங்களின் பின்னர் வரலாற்று வெற்றியையும் பதிவு செய்தது.

விராட் கோஹ்லி தலைமையிலான இந்திய கிரிக்கெட் அணியானது, ஜோ ரூட் தலைமையிலான இங்கிலாந்து அணியுடன் 5 போட்டிகள் கொண்ட ஐ.சி.சி உலக சம்பியன்ஷிப் தொடரில் விளையாடி வருகிறது. இதன் படி இரு அணிகளுக்கும் இடையிலான நான்காவது டெஸ்ட் போட்டி கடந்த வியாழக்கிழமை த ஓவல் மைதானத்தில் ஆரம்பமானது.

போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற இங்கிலாந்து அணி முதலில் களத்தடுப்பை தேர்வு செய்தது. அதன் படி முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி தங்களுடைய முதல் இன்னிங்ஸில் 191 ஓட்டங்களைக் குவித்தது. பதிலுக்கு முதல் இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி, இந்திய அணியை விட 99 ஓட்டங்கள் மேலதிகமாக பெற்று 290 ஓட்டங்களை குவித்தது.

99 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த இந்திய அணி, ரோஹித் சர்மாவின் அபாரமான சதத்தின் உதவியுடன் 466 ஓட்டங்களை குவித்தது. அந்த அடிப்படையில் இங்கிலாந்து அணியின் வெற்றி இலக்காக 368 ஓட்டங்கள் நிர்ணயிக்கப்பட்டது.

குறித்த இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 210 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழக்க, இந்திய அணி 157 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்று தொடரில் 2-1 என்ற அடிப்படையில் முன்னிலை பெற்றுள்ளது. இரு அணிகளுக்கும் இடையிலான ஐந்தாவதும், இறுதியுமான போட்டி நாளை மறுதினம் மென்செஸ்டரில் ஆரம்பமாகவுள்ளது.

# முதல் ஆசிய அணித் தலைவராக சாதனை படைத்த கோஹ்லி

இங்கிலாந்து அணியுடன் நேற்றுமுன்தினம் நிறைவுக்குவந்த நான்காவது டெஸ்ட் போட்டியில் இந்திய அணி வெற்றி பெற்றதை தொடர்ந்து இந்திய அணித்தலைவர் விராட் கோஹ்லி முதல் ஆசிய அணித்தலைவராக சாதனை படைத்தார்.

விராட் கோஹ்லி தலைமையிலான இந்திய அணிக்கும், ஜோ ரூட் தலைமையிலான இங்கிலாந்து அணிக்கும் இடையிலான 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் நான்காவது டெஸ்ட் போட்டி நேற்று முன்தினம் நிறைவுக்கு வந்தது. இந்த போட்டியில் இந்திய அணி 157 ஓட்டங்கள் வித்தியாசத்தில் த்ரில் வெற்றி பெற்றது.



இந்த வெற்றியை தொடர்ந்து இங்கிலாந்து மண்ணில், இங்கிலாந்து அணிக்கு எதிராக மூன்று டெஸ்ட் போட்டிகளை வெற்றி கொண்ட முதல் ஆசிய அணித் தலைவர் என்ற சாதனையை இந்திய அணியின் தலைவர் விராட் கோஹ்லி படைத்தார்.

# மீண்டும் பாகிஸ்தான் அணிக்காக களமிறங்கும் ஆமிர்

பாகிஸ்தான் கிரிக்கெட் சபையிடமிருந்து எழுந்த அழுத்தங்கள் காரணமாக கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் இளம் வயதில் சர்வதேச கிரிக்கெட் அரங்கிலிருந்து ஓய்வை அறிவித்த மொஹமட் ஆமிர், ஓய்வு முடிவை திரும்பப்பெற்று மீண்டும் பாகிஸ்தான் அணியில் இணையவுள்ளதாக பாகிஸ்தான் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கடந்த 2009ஆம் ஆண்டு தன்னுடைய இளம் வயதிலேயே சர்வதேச கிரிக்கெட் அறிமுகம் பெற்றுக்கொண்ட மொஹமட் ஆமிர், கடந்த 2010ஆம் ஆண்டு இங்கிலாந்து - பாகிஸ்தான் அணிகளுக்கு இடையில் நடைபெற்ற போட்டியின் போது இங்கிலாந்தில் வைத்து கிரிக்கெட் சூதாட்டத்தில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் சிக்கி அவர் குற்றவாளி என நிரூபிக்கப்பட்டதால் அவருக்கு 5 வருடம் கிரிக்கெட் போட்டிகளில் விளையாட பாகிஸ்தான் கிரிக்கெட் சபை தடை விதித்திருந்தது.




பின்னர் தடையில் இருந்து மீண்டு வந்த மொஹமட் ஆமிர் பாகிஸ்தான் அணிக்காக மீண்டும் சிறந்த வேகப்பந்து வீச்சாளராக வலம் வந்தார். இவ்வாறான நிலையில் அவருக்கு பாகிஸ்தான் கிரிக்கெட் சபையிடம் இருந்து நிறைய அழுத்தங்கள் வந்ததால் கடந்த 2019ஆம் ஆண்டு டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் இருந்து தனது ஓய்வை அறிவித்தார்.

அழுத்தங்களுக்கு மத்தியில் தொடர்ந்து மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கொண்ட போட்டிகளில் விளையாடிவந்த நிலையில் மொஹமட் ஆமிர் கடந்த டிசம்பரில் தனது 28ஆவது வயதில் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் இருந்து திடீர் ஓய்வை அறிவித்தார்.

இந்நிலையில் நேற்று முன்தினம் பாகிஸ்தான் அணியின் தலைமை பயிற்றுவிப்பாளரான மிஸ்பாஹ் உல் ஹக் மற்றும் பந்துவீச்சு பயிற்றுவிப்பாளரான வகார் யூனிஸ் ஆகியோர் பதவி துறந்த நிலையில், ஓய்வை அறிவித்த ஆமிர் மீண்டும் பாகிஸ்தான் அணியில் இணைந்து விளையாடவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இவரது வருகை பாகிஸ்தான் கிரிக்கெட் அணிக்கு பலமாக அமையும் என்பதில் சந்தேகமில்லை.

விளையாட்டு செய்திகள்
thamilansports@gmail.com

# 39 வருடங்கள் கோமாவில் இருந்தவர் மரணம்

(ரமணி)




பிரான்ஸை சேர்ந்த உதைபந்தாட்ட வீரரான ஜீன்-பியரி அடம்ஸ் கடந்த நேற்று முன்தினம் நிம்ஸ் பல்கலைக்கழக மருத்துவமனையில் காலமானார். இவர் கோமாவில் இருந்து 39 ஆண்டுகளுக்குப் பிறகு காலமானார்.

இவர் 1948 இல் செனகலின் தக்கார் நகரில் பிறந்தார். 73 வயதான ஜீன்-பியர் அடம்ஸ் 39 ஆண்டுகளாக கோமாவில் இருந்தார். ஜீன்-பியரி அடம்ஸ் 1972 முதல் 1976 வரை பிரான்ஸ் தேசிய அணிக்காக 22 போட்டிகளில் விளையாடினார். பி.எஸ்.ஜி அணிக்காக 41 போட்டிகளில் விளையாடினார்.

முழங்காலில் ஏற்பட்ட வலி காரணமாக லியோன் மருத்துவமனையில் சிகிச்சை பெறச்சென்றார். முழங்கால் தசைநார் சேதமடைந்ததால் சத்திர சிகிச்சை மேற்கொள்ள முடிவு செய்யப்பட்டது. அவர் சத்திர சிகிச்சைக்குப் போகும்போது சிறந்த நிலையில் இருந்ததாகவும், சில மணிநேரங்களுக்குப் பிறகு எழுந்திருப்பார் என்றும் எதிர்பார்க்கப்பட்டது.

லியோன் மருத்துவமனையில் வழக்கமான முழங்கால் அறுவை சிகிச்சையின் போது செலுத்தப்பட்ட மயக்க மருந்து காரணமாக அடம்ஸ் ஆழ்ந்த கோமா நிலைக்கு சென்றார். அப்போது அவருக்கு 34 வயது. அடம்ஸின் மருத்துவர் பியரி ஹூத், அறுவை சிகிச்சை கையாளப்பட்ட விதத்திற்கு எதிராக ஒரு வழக்கை தாக்கல் செய்தார்.

லியோனில் உள்ள ஏழாவது திருத்தம் தீர்ப்பாயத்திற்கு முன்பு இந்த வழக்கு ஏழு ஆண்டுகளுக்கு இழுத்துச் செல்லப்பட்டது. இறுதியில் மருத்துவர்கள் தன்னிச்சையான குற்றவாளிகள் என்று கண்டறியப்பட்டது. 'நாய் குரைக்கும் போது ஜீன்-பியர் உணர்கிறார், மணக்கிறார், கேட்கிறார், குதிக்கிறார். ஆனால் அவரால் பார்க்க முடியவில்லை' என அடம்ஸின் மனைவி தனது கணவரைப் பற்றி 2007 ஆம் ஆண்டில், ஒரு சுருக்கமான அறிவிப்பை வெளியிட்டார்.

# உலகக்கிண்ண குழாம் அறிவிக்கப்பட்டு ஒரு சில மணித்தியாலங்களில் பதவிதுறந்த பயிற்றுவிப்பாளர்கள்



ஐ.சி.சி இருபதுக்கு 20 உலகக்கிண்ண கிரிக்கெட் தொடர் அடுத்த மாதம் ஆரம்பமாகவுள்ள நிலையில், பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் தலைமை பயிற்றுவிப்பாளரான மிஸ்பாஹ் உல் ஹக் மற்றும் பந்துவீச்சு பயிற்றுவிப்பாளரான வகார் யூனிஸ் ஆகியோர் உடனடியாக தங்கள் பதவிகளிலிருந்து விலகுவதாக அறிவித்தனர்.

ஏழாவது ஐ.சி.சி இருபதுக்கு 20 உலகக்கிண்ண தொடருக்கான அணிகளை அந்தந்த நாட்டு கிரிக்கெட் சபைகள் அறிவித்து வருகின்றன. அந்த வகையில் பாகிஸ்தான் அணியின் குழாம் நேற்று முன்தினம் பகல் அறிவிக்கப்பட்ட நிலையில், ஒரு சில மணித்தியாலங்களின் பின்னர் மிஸ்பாஹ் உல் ஹக் மற்றும் வகார் யூனிஸ் ஆகியோர் பதவி துறந்தனர்.

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் தலைமை பயிற்றுவிப்பாளராக இருந்த மிஸ்பாஹ் உல் ஹக்கிற்கு, மேற்கிந்தியத் தீவுகள் சுற்றுப்பயணத்தின்போது கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டது. இதனால் அடுத்து செப்டெம்பர் மாதம் 17ஆம் திகதி ஆரம்பிக்கவுள்ள நியூசிலாந்து அணிக்கெதிரான தொடருக்கு பாகிஸ்தான் அணிக்கு தற்காலிக தலைமை பயிற்றுவிப்பாளராக வகார் யூனிஸ் அல்லது சக்லைன் முஷ்டாக் ஆகிய இருவரில் ஒருவர் நியமிக்கப்படலாம் என செய்திகள் வெளிவந்திருந்தன.

இந்நிலையிலேயே தலைமை பயிற்றுவிப்பாளர் மிஸ்பாஹ் உல் ஹக் மற்றும் பந்துவீச்சு பயிற்றுவிப்பாளர் வகார் யூனிஸ் ஆகியோர் பதவி விலகியுள்ளனர். முன்னதாக தேர்வுக்குழு தலைவராகவும் செயற்பட்ட மிஸ்பாஹ் உல் ஹக் குறித்த பதவியிலிருந்து விலகி, தலைமை பயிற்றுவிப்பாளராக மாத்திரம் செயற்பட்டுவந்த நிலையில் தற்போது அதிலிருந்தும் விலகியுள்ளார்.



# அமைச்சரவை தீர்மானங்கள்

## 2021.09.06 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் எட்டப்பட்ட முடிவுகள்

**01. வெளிவிவகார அமைச்சின் அனைத்து அலகுகளும் ஒரு கட்டிடத்தில் நிறுவுதல்**

தற்போது வெளிவிவகார அமைச்சு இயங்கி வருகின்ற ஜனரஜ கட்டிடத்தில் போதுமானளவு இடவசதியின்மையால் குறித்த அமைச்சின் சில அலகுகள் தலைமைக் காரியாலயத்திற்கு வெளியே சில இடங்களில் நடத்திச் செல்லப்படுகின்றது. அதனால் பல்வேறு நிர்வாகப் பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க நேரிட்டுள்ளது. அவ்வாறே, சமகாலத் தேவைகளுக்குப் பொருத்தமான வகையில் வெளிவிவகார அமைச்சுக்கு போதியளவு வசதிகளுடன் கூடிய கட்டிடமொன்று நிர்மாணிக்க வேண்டிய தேவை கண்டறியப்பட்டுள்ளது. அதற்கமைய புதிய கட்டிடத்தை நிர்மாணிப்பதற்குத் தேவையான காணித்துண்டை நகர அபிவிருத்தி அதிகாரசபைக்குச் சொந்தமான வித்யா மாவத்தையில் அமைந்துள்ள தற்போது தொழில்நுட்பவியல் நிறுவனத்தால் பயன்படுத்தப்படுகின்ற காணியிலிருந்து ஒதுக்கிக் கொள்வதற்கு வெளிவிவகார அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை உடன்பாடு தெரிவித்துள்ளது.

**02. வயம்ப மஹஎல மற்றும் தெதுரு ஓயா நீர்ப்பாசன அபிவிருத்திக் கருத்திட்டத்தின் கீழ் காணப்படும் நிலப்பரப்பை மகாவலி பொருளாதார வலயமாக பிரகடனப்படுத்தல்**

மகாவலி ஆற்றில் வழிந்தோடும் மேலதிக நீரை வடமேல் மாகாணம், வடமத்திய மாகாணங்களில் காணப்படும் கிளை ஆற்றுப்படுகைகளில் வாழும் கிராமிய மக்களின் விவசாயப் பொருளாதார செயன்முறைக்காக பயனுள்ள வகையில் பயன்படுத்துவதற்கும், குறித்த பிரதேசங்களில் குடிநீர் மற்றும் தொழிற்சாலைகளுக்கான நீர்த்தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குமான முன்னுரிமை கருத்திட்டமாக மகாவலி நீர் பாதுகாப்பு முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. குறித்த கருத்திட்டத்தின் கீழ், எதிர்வரும் நான்கு வருடங்களில் 88.9 கிலோமீற்றர்கள் நீளமான வயம்பஎல மற்றும் 95.7 கிலோமீற்றர்கள் நீளமான வடமத்திய மஹஎல போன்ற செயற்கை ஆறுகள் இரண்டையும் நிர்மாணிப்பதற்கும், 07 புதிய நீர்த்தேக்கிக் களஞ்சியங்கள் மூலம் 1,500 கிராமியக் குளங்களைப் போசிப்பதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. அதேபோல், தற்போது தெதுரு ஓயாவை குறுக்கறுத்து நிர்மாணிக்கப்பட்டுள்ள புதிய தெதுரு ஓயா நீர்த்தேக்கத்தின் பணிகள் மற்றும் அதன்கீழுள்ள கட்டுமானங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன், குறித்த கருத்திட்டத்தின் கீழ் 200 சிறிய குளங்கள் மூலம் 25,000 ஏக்கர்களில் இருபோகங்களும் பயிரிடக்கூடிய வகையில் நீர்ப்பாசன வசதிகளை வழங்குவதற்கும், 50,000 புதிய நுகர்வோர்களுக்கான குடிநீர் வசதிகளை வழங்குவதற்கும், 1.5 மெகாவாற்றுடன் கூடிய மீள்பிறப்பாக்க எரிசக்தி கருத்திட்டத்தின் மூலம் மின்னுற்பத்தி செய்வதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது.

மேற்படி இரண்டு கருத்திட்டங்களின் கீழ், குருநாகல், புத்தளம், அநுராதபுரம் மற்றும் மாத்தளை போன்ற மாவட்டங்களில் 26 பிரதேச செயலகப் பிரிவுகளை உள்ளடக்கியதாக குறைபயன்பாட்டு அபிவிருத்தி கொண்ட பிரதேசங்களை துரிதப்படுத்தல் மற்றும் ஒன்றிணைந்த கிராமிய அபிவிருத்தி செயன்முறை மூலம் அபிவிருத்தி செய்வதற்கு அடையாளங் காணப்பட்டுள்ளது. அதற்கமைய, குறித்த வலயங்களுக்கு ஏற்புடைய அனைத்து அமைச்சுக்கள் மற்றும் நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் ஒன்றிணைந்த முதலீட்டுத் திட்டமொன்றைத் தயாரித்து எதிர்வரும் மூன்று வருடங்களில் குறித்த திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. அதற்கமைய, குருநாகல், புத்தளம், அநுராதபுரம் மற்றும் மாத்தளை மாவட்டங்களில் 26 பிரதேச செயலகப் பிரிவுகள் மற்றும் 410 கிராம அலுவலர் பிரிவுகளை உள்ளடக்கிய நிலப்பரப்பு அதிகார எல்லைப் பிரதேசத்தை, 1979 ஆம் ஆண்டு 23 ஆம் இலக்க இலங்கை மகாவலி அதிகாரசபை சட்டத்தின் கீழ் மகாவலி விசேட அதிகார பிரதேசமாக பிரகடனப்படுத்தி ஒருங்கிணைந்த கிராமிய அபிவிருத்தி செயன்முறையின் கீழ் அபிவிருத்தி செய்வதற்காக நீர்ப்பாசன அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.




**03. சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சியாளர்கள் முகங்கொடுத்துள்ள இடர்பாடுகளுக்கு சலுகை வழங்கல்**

சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சியாளர்கள் முகங்கொடுத்துள்ள இடர்பாடுகளை அடையாளங்கண்டு அவர்களுக்கு வழங்க வேண்டிய சலுகைகள் தொடர்பான பரிந்துரைகளை சமர்ப்பிப்பதற்கும், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சியாளர்கள் தொடர்பான தரவுத் தொகுதியொன்றை தயாரித்துக் கொள்வதற்கும் பொறிமுறையொன்றை முன்மொழிவதற்கும், உத்தியோகத்தர்கள் குழுவொன்றை நியமிப்பதற்காகவும் 2020 ஒக்டோபர் மாதம் 26 ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைய, கொவிட்-19 பெருந்தொற்று நிலைமை மற்றும் உயிர்த்த ஞாயிறு தாக்குதலால் பாதிக்கப்பட்ட சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சியாளர்களுக்கு உகந்த சலுகைகள் தொடர்பாக குறித்த உத்தியோகத்தர் குழுவால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கும் கைத்தொழில் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**04. பாரியளவிலான வர்த்தக ரீதியான பால் பண்ணைகளை அமைப்பதற்காக தனியார்துறை முதலீட்டாளர்களுக்கு நீண்டகால குத்தகை அடிப்படையில் காணி வழங்கல்**

இலங்கையின் திரவப்பால் தேவையின் 40 வீதமானவை உள்ளூரில் உற்பத்தி செய்யப்படுவதுடன், ஏனையவற்றை இறக்குமதி செய்வதற்காக வருடாந்தம் 50 பில்லியன் ரூபாக்கள் செலவிடப்படுகின்றன. அதனால், பொருளாதார மறுசீரமைப்பு மற்றும் வறுமையொழிப்புக்கான ஜனாதிபதி செயலணியால் உள்ளூர் பால் உற்பத்தியை அதிகரிப்பதற்காக உள்ளூர் மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களை ஊக்குவிப்பதற்கான யோசனைகள் இலங்கை முதலீட்டுச் சபையால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய, இலங்கை முதலீட்டுச் சபை, ஆர்வம் காட்டும் முதலீட்டாளர்களின் யோசனைகளைக் கோரியுள்ளதுடன், குறித்த சபையின் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவால் பரிந்துரைக்கப்பட்டுள்ள கருத்திட்ட யோசனைகளை சமர்ப்பித்தவர்களுக்கு தேசிய கால்நடை அபிவிருத்தி சபைக்குச் சொந்தமான பண்ணைகளில் தற்போது பயன்படுத்தாத காணிகள் மற்றும் பயன்பாட்டுக்கு உட்படுத்தாத ஏனைய அரச காணிகளை நவீன பால் பண்ணைகளை அபிவிருத்தி செய்வதற்காக கீழ்க்குறிப்பிட்ட வகையில் 30 வருடங்கள் நீண்டகால குத்தகையின் அடிப்படையில் வழங்குவதற்காக விவசாய அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

H.B.K.I.R International Investment/ Access Agro (Pvt) Ltd நிறுவனத்திற்கு 700 ஏக்கர்கள் மற்றும் Pesara Logistics நிறுவனத்திற்கு 60 ஏக்கர்களும் தேசிய கால்நடைகள் அபிவிருத்தி சபைக்குச் சொந்தமான நிக்கவெரட்டிய பகுதியில் அமைந்துள்ள பண்ணையில் ஒதுக்கி வழங்கல்.

அரச பெருந்தோட்ட அபிவிருத்தி சபைக்குச் சொந்தமான கலபொடவத்த பெருந்தோட்டம் மற்றும் மவுன்ட் ஜின் தோட்டங்களில் 811 ஏக்கர்களை Farm's Pride (Pvt) Ltd நிறுவனத்திற்கு ஒதுக்கி வழங்கல்

அரச பெருந்தோட்ட அபிவிருத்தி சபைக்குச் சொந்தமான தெல்தொட்ட பெருந்தோட்டம் மற்றும் க்றேவ் வெலி தோட்டங்களில் முறையே, 200 ஏக்கர்கள் மற்றும் 150 ஏக்கர்களை Hillside Agro (Pvt) Ltd நிறுவனத்திற்கு ஒதுக்கி வழங்கல்

தேசிய கால்நடைகள் அபிவிருத்தி சபைக்குச் சொந்தமான கொட்டுக்கச்சிய பண்ணையில் 250 ஏக்கர்களை Gamma Pizzakraft (Pvt) Ltd நிறுவனத்திற்கு ஒதுக்கி வழங்கல்

**05. ஆட்களை அழிக்கும் நிலக்கண்ணி வெடிகளைத் (Anti - personnel mines) தடை செய்யும் சட்டமூலம்**

1997 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 18 ஆம் திகதி ஒஸ்லோ நகரில் இடம்பெற்ற ஆட்களை அழிக்கும் நிலக்கண்ணி வெடிகளைத் தடை செய்தல் தொடர்பான இராஜதந்திர மாநாட்டில், ஆட்களை அழிக்கும் நிலக்கண்ணி வெடிகளைப் பாவனை செய்தல், இருப்பில் வைத்திருத்தல், உற்பத்தி செய்தல் மற்றும் இடமாற்றம் செய்தல் போன்றவற்றை தடை செய்தல் மற்றும் அவற்றை அழித்தல் தொடர்பான சமவாயத்தின் உடன்பாடு எட்டப்பட்டுள்ளது. அதற்கமைய, 2017 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 13 ஆம் திகதி இலங்கையில் குறித்த உடன்படிக்கை அங்கீகரிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதுடன், அதற்காக சட்டத்தை வகுப்பதற்கான பொறுப்பு இலங்கை அரசாங்கத்திற்கு உண்டு. அதற்காக சட்ட வரைஞரால் தயாரிக்கப்பட்ட சட்டமூலத்திற்கு சட்டமா அதிபரின் ஒப்புதல் கிடைத்துள்ளது. குறித்த சட்டமூலத்தை அரச வர்த்தமானியில் வெளியிடுவதற்கும், பின்னர் பாராளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பித்ததற்காகவும் நீதி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**06. 2020 டோக்கியோ பராலிம்பிக் போட்டிகளில் தங்கப்பதக்கம் மற்றும் வெண்கலப் பதக்கங்களை வென்றெடுத்த விளையாட்டு வீரர்களுக்கு நிதியனுசரணை வழங்கல்**

2020 பராலிம்பிக் போட்டிகளில் F46 ஆண்கள் குழுவின் ஈட்டி எறிதல் போட்டியில் புதிய உலக சாதனையைப் பதிவு செய்து தங்கப்பதக்கத்தை தினேஷ் பிரியந்த ஹேரத்தும், F64 ஆண்கள் குழுவின் ஈட்டி எறிதல் போட்டியில் வெண்கலப் பதக்கத்தை சமித்த துலானும் F64 வென்றெடுத்துள்ளதுடன், அதன் மூலம் அவர்கள் தாய்நாட்டுக்கு விசேட வெற்றியை ஈட்டித்தந்துள்ளனர். 1973 ஆம் ஆண்டு 25 ஆம் இலக்க சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நிறுவப்பட்டுள்ள தேசிய விளையாட்டுக்கள் சபையால் அங்கீகரிக்கப்பட்டுள்ள சர்வதேச விளையாட்டுப் போட்டிகளில் பணப் பரிசுகளை வழங்குவதற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது. அதற்கமைய, மேற்படி வெற்றிகளை ஈட்டித்தந்த விளையாட்டு வீரர்கள் இருவருக்கும் மற்றும் பயிற்றுவிப்பாளர்கள் இருவருக்கும் தேசிய விளையாட்டுக்கள் சபையின் பரிந்துரைக்கமைய பணப்பரிசு வழங்குவதற்காக விளையாட்டுக்கள் மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**07. தொழில்நுட்ப பூங்காக்களை அமைத்தல்**

2021 வரவு - செலவுத் திட்டத்தின் மூலம் காலி, குருநாகல், அநுராதபுரம், கண்டி மற்றும் மட்டக்களப்பு போன்ற மாவட்டங்களில் 05 தொழில்நுட்ப பூங்காக்களை அமைப்பதற்கு முன்மொழியப்பட்டுள்ளது. அதற்கமைய, அதிவேக நெடுஞ்சாலைக்கு அணுகக்கூடிய வசதிகள், சுற்றுலாப் பயணிகளைக் கவர்ந்திழுக்கக் கூடிய, தேவையான மனித வளத்துடன் கூடியதும் ஏனைய இதர சேவைகளைக் கருத்தில் கொண்டு குறித்த தொழில்நுட்பப் பூங்காக்களை அமைப்பதற்குப் பொருத்தமான இடங்கள் தொழில்நுட்ப அமைச்சால் அடையாளங் காணப்பட்டுள்ளது. முன்மொழியப்பட்டுள்ள கருத்திட்டத்தை வணிக ரீதியான தொழில் முயற்சிகளாக நடைமுறைப்படுத்துவதற்கு இயலுமான வகையில் திறைசேரி செயலாளருக்கு ஒட்டுமொத்த பங்குரிமை உரித்தாகும் வகையில் தொழில்நுட்ப பூங்காக்கள் அபிவிருத்திக் கம்பனி எனும் பெயரிலான கம்பனியை நிறுவுவதற்கும், எதிர்வரும் காலங்களில் குறித்த கம்பனியை கொழும்பு பங்குச் சந்தையில் பதிவு செய்து தனியார்த் துறை முதலீட்டாளர்களுக்கு குறித்த கருத்திட்டத்தில் பங்கெடுப்பதற்கான வாய்ப்புக்களை வழங்குவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. அதற்கமைய, முன்மொழியப்பட்டுள்ள கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக தொழில்நுட்ப அமைச்சராக மேன்மைதங்கிய ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**08. கொவிட்-19 பெருந்தொற்று நிலைமையில் கல்வித் துறையில் கற்றல் கற்பித்தல் செயன்முறையை தொடர்ந்து மேற்கொள்வதற்காக நெணச கல்வி தொலைக்காட்சி அலைவரிசைகளின் எண்ணிக்கையை அதிகரித்தல்**

கல்வி நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள சிங்கள மற்றும் தமிழ் மொழிமூலமான இரண்டு அலைவரிசைகள் மூலம் டயலொக் நிறுவனம் 2018 ஆம் ஆண்டு தொடக்கம் செய்மதி தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி நெணச எனும் கருத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்தியது. குறித்த நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் டயலொக் நிறுவனத்தால் கிட்டத்தட்ட 2,200 பாடசாலைகளுக்கு தொலைக்காட்சிகள் மற்றும் டயலொக் இணைப்பு வழங்கப்பட்டுள்ளதுடன், குறித்த இணைப்புகளுக்கான மாதாந்தக் கட்டணமின்றி இலவசமாக வழங்கப்பட்டது. கொவிட் - 19 பெருந்தொற்றுக் காரணமாக கல்வித் துறையில் கற்றல் கற்பித்தல் செயன்முறையை தொடர்ந்து மேற்கொள்வதற்காக நெணச கருத்திட்டத்தில் புதிய இரண்டு அலைவரிசைகள் உள்ளடங்கலாக 04 அலைவரிசைகள் மூலம் 2021 செப்டெம்பர் மாதம் 07 ஆம் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்துவதற்கும், 2022 ஆம் ஆண்டு ஜனவரி 01 ஆம் திகதி தொடக்கம் மொத்த அலைவரிசைகளின் எண்ணிக்கையை 10 ஆக அதிகரிப்பதற்கும், டயலொக் நிறுவனம் உடன்பாடு தெரிவித்துள்ளது. அதற்கமைய, குறித்த கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்தல் தொடர்பாக கல்வி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

***(அரசாங்க தகவல் திணைக்களத்தின் பிரசார பிரிவினால் சிங்கள மொழியிலான அமைச்சரவை தீர்மான ஆவணம் தமிழ் மொழியில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது).***

# காலத்தை மாற்றிய திறனாளி பிரகாஷ்

உண்மையில் தமிழ் சமூகம் என்பது ஒருவரின் பிறப்பை கொண்டாடுவதில்லை. பெரும்பாலும் மரணத்தின் போதே கொண்டாடுகிறது. இதற்கு காரணம் இருக்கிறது பிறக்கும்போதே எல்லோரும் குழந்தைகளாகவே பிறக்கின்றோம். ஆனால் இறக்கும் போது எல்லோரும் ஒரேமாதிரியாக இறப்பதில்லை. அதுவரையான வாழ்நாளில் அந்த ஆத்மா எதிர்கொண்ட சவால்களை முறியடித்து எவ்வளவு தூரம் இந்த மண்ணுக்கு பிரயோசனமான முறையில் வாழ்ந்திருக்கிறதோ அதனைக் கொண்டாடுகிற அறிவுபூர்வமான சமூகம் நம்முடையது!

இருந்தும் நான் ஒவ்வொருவரின் பிறந்த நாட்களிலும் வாழ்த்து எழுதுகிறேன் என்பது அதுவரையான அவர்களின் வாழ்க்கையின் சாதித்தவைகளையும், மண்ணுக்கு பிரயோசனப்பட்டதையும் நினைவு கூருவதோடு, அவர்களை அவர்களுக்கே அடையாளம் காட்டி அந்த துறையில் ஊக்கப்படுத்தும் ஒரு வழிமுறையே!

இந்நிலையில் கடந்த 02.09.2012 திகதி அன்று கொவிட் பெருந்தொற்றினால் பாதிக்கப்பட்டு காலமான அன்பு சகோதரன் யாழ்ப்பாணத்தை சேர்ந்த ஊடகவியலாளர், எழுத்தாளர் பிரகாஷ் ஞானபிரகாஷத்தின் மரணச் செய்தி அவரை அறிந்தவர்கள் மட்டத்தில் பெரும் அதிர்வை ஏற்படுத்தியிருக்கிறது. வெறும் 26 வயது வரை வாழ்ந்த ஒரு மாற்றுத்திறனாளி இளைஞனால் இன்று இத்தனை சாதனைகளை, முன்னுதாரண வாழ்வை வாழ முடிந்திருக்கிறது என்பது நாம் வாழும் காலத்தில் நம் கண் முன்னால் வாழ்ந்த ஒரு முன்மாதிரி மனிதனாக கொண்டாட வேண்டும்.



ஐந்தாம் ஆண்டு வரை மட்டுமே கல்வி கற்ற ஒருவனால் அதுவும் கால்கள் அற்ற ஒரு விசேட தேவையுடைய ஒருவனால், தன் தனி முயற்சியால் கற்று, ஆங்கில மொழியிலும் சரளமாக பேச, எழுத திறமை வளர்த்துக்கொண்டு சுயாதீனமாக தான் விரும்பிய ஊடக துறையில் உண்மையாகவும், நேர்மையாகவும் உடனுக்குடனான நம்பகத் தன்மையான செய்திகளை முகநூல் மற்றும் ட்விட்டர்களில் பதிவுசெய்ததோடு, இலங்கையில் எல்லா பத்திரிகைகளுக்கும் பிராந்திய செய்தியாளராக, கட்டுரைகள் எழுதியவராக, சிறுகதை எழுத்தாளராக தனது ஆளுமைகளை சுயமாக வளர்த்துக்கொண்ட பேராற்றல் கொண்ட ஆத்மா இன்று கொவிட் எனும் பெரும் உயிர் கொள்ளி நோயினால் காவு கொள்ளப்பட்டுள்ளது ஏற்றுக்கொள்ள முடியாத இழப்பு.

தன் வாழ்நாளில் தான் ஒரு ஊடகவியலாளனாக அங்கீகாரம் பெறவேண்டும் என்ற இலட்சியம் கொண்டிருந்தவன் அது தொடர்பிலான கற்கை நெறிகளை கற்கமுடியாத வருத்தம் அவருக்கு எப்போதும் இருந்தது. பின் நாட்களில் அவர் ஒரு எழுத்தாளராக வேண்டும் என்ற ஆசை இருந்தது. தான் ஒரு மாற்றுத் திறனாளி என்பதை அவரே தானாக எந்த ஒரு இடத்திலும் பதிவுசெய்துகொள்ள விரும்பாதவர். தெரிந்து கேட்டால் மட்டுமே அதுகுறித்த






விபரங்களை பேசும் அவர், தன்னுடைய நிலையை எந்த ஒரு சுய தேவைகளுக்காகவும் பயன்படுத்திக் கொண்டதே இல்லை. இன்று பிரகாஷின் மரணம் குறித்து தகவல் அறிந்து பலரும் என்னிடம் கேட்கும் ஒரு விடயம் "அவர் ஒரு மாற்றுத்திறனாளியா இவ்வளவு காலம் எங்களுக்கு தெரியாமல் போய்விட்டதே" என்று.

வடக்கில் நடைபெற்ற பல்வேறு போராட்டங்களிலும் தன்னை சுயாதீனமாக இணைத்துக் கொண்டவர். வடக்கின் வீரனாக இருந்தபோதும் பிரகாஷ் மலையகத்தின் மீது தீராத அன்பும் அக்கறையும் கொண்டிருந்தவர். இன்று அவரின் மரணத்தால் பெரிதளவில் சமூக வலைத்தளங்களில் அவர் பற்றி எழுதுவோர் மலையக நண்பர்களே. வடக்கு, கிழக்கு, மலையகம் என்ற பாகுபாடு அற்ற ஒருவராகவே அவர் இருந்தார். ஆனாலும் மலையக செய்திகள், மலையக போராட்டங்களின் பொழுதுகளில் தன்னுடைய குரலை உரக்க பதித்தவர்.

அவர் சுயமாக எழுதிய தன்னுடைய வாழ்க்கை வரலாற்று அனுபவங்களை உள்ளடக்கிய சுயசரிதை ஒன்றினை எழுதி முடித்து கொவிட் நிலைமை காரணமாக வெளியிட தாமதமாகிக் கொண்டிருந்த சமயம் இது I, Pragash ( Autobiography) என்ற அவர் எழுதி முடித்த நூல் நிச்சயம் அவரின் குடும்பத்தவர்களால் வெளியிடப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு சாமான்ய இளைஞனின் துணிச்சலும் தன்னம்பிக்கையும் புருவம் உயர்த்திப் பார்க்க வைத்திருக்கிறது. பிரகாஷ் பற்றி நான் அறிந்துகொண்டது அவரது சுயசரிதை நூல் குறித்த விடயங்களை என்னிடம் பகிர்ந்துகொண்டு ஆலோசனைகளை கேட்டிருந்தபோது தான். 2019ஆம் ஆண்டு அவரை இலங்கையின் வாரப்பத்திரிகை ஒன்றுக்கு நேர்காணல் செய்திருந்தேன். இன்றுவரை இந்த முன்னுதாரண இளைஞனை நேர்கண்ட ஒரே ஆள் நான் என்கிற பெருமையோடு, அன்னாரின் இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தார், ஊரவர்கள், நண்பர்கள் அனைவருக்கும் ஆறுதல்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

அவர் வாழ்ந்த சமூகமும் ஏன் ஒட்டுமொத்த தமிழ் சமூகமும் இந்த நாடும் அவர் இருக்கும் போதே அவருக்கான அங்கீகாரத்தை செய்யத் தவறியுள்ளது என்பது என்னுடைய வருத்தம்.

***• ப.கனகேஸ்வரன் 'கேஜி'***